Regd. No. M. 4900. 16 பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 8-5-1948 சனிக்கிழமை மலர் 35.

## தாயின் மேல் ஆணை!



### மறைவு 11-5-33.

மாகாண மாநாட்டிற்கென இன்று கூடும் பல லட்சக்கணக்கான இளம் வீரர்களைக் கண்டு தாய்மை கனிந்த உள்ளத்தோடு மகிழும் பேறு அன்னை நாகம்மையார் ஒருவருக்கே உண்டு. ஆனால் இன்று அவர்கள் நம்மிடையே இல்லை. அவர்களின் தாய்மைத் தொண்டே அன்றையத் தொண்டர் குழாத்திற்குப் பெரும் வலிமையாக, உதவியாக, ஆதரவாக விளங்கியது. அதன் பயனே இன்று நாம் எண்ணற்ற லட்சத்தினராக ஆனால் ஒரே மனதினராகக் கூடிச் செயல்புரிகிறோம். அன்னையார் வளர்த்த பிள்ளைகளில், அப்படியுமிப்படியுமாகச் சில பின் தங்கி விட்டாலும், ஒன்றுக்கு ஒரு இலட்சம் என்று குவியும் திராவிட இளைஞர்கள், வீரர்கள், மாணவர்கள், தோழியர்கள், அறிஞர்களாகிய நாம் இந்த நாளில் மீண்டும் தாயின் மேல் ஆணை கூறி நம் லட்சிய புரியை நோக்கி முன்னேறுவோமாக!

# காதல் கலைக் குதவாது!

"தோழியர் இந்திரா"

★

'காதல் போயிற் சாதல்' என்று பாடல் பெறுமளவுக்குக் காதலுக்குள்ள மதிப்பு, இந்த நாட்டில் வளர்ந்து விட்டது. பல நாள் வைத்திருந்த பேனாவை இழந்த காரணத்திற்கு நீங்கள் இறக்கவா போகிறீர்கள்? இன்று தோழர் காந்தியார் கொல்லப்பட்டாரென்ற காரணத்திற்காக—அவர் மேல் உள்ள அன்பைக் காட்டத் தற்கொலையா புரிந்து கொள்வது? ஒருவனைக் காதலித்து, அவனை மணக்க இயலா விட்டால், இறந்து விடுவது எவ்வளவு மடத்தனம்? எது காதல்? செல்லுகிற ஆணைக் கண்டு, அவனது கண் சிமிட்டுக்குப் பதில் தரும் முறையில் செய்கிற செய்கை காதலானால், காலித்தனம் தான் காதலாகிறது. காதலுக்கு என்ன தான் பொருள் கொள்கிறார்களோ! பள்ளிகளில், கல்லூரிகளில், பார்த்த இடமெங்கும் காதல் நாடகம் நடக்கத்தான் செய்கிறது. இந்த ஓடுகிற காதல் நாடகத்தால், ஊணுறக்கம் வெறுத்துப்போகுமாம்! பாலுங் கசக்குமாம்! குளிர் தென்றலும், அனைக் காற்றாகுமாம்! சந்திரன் சூரியனாகுமாம்! மோதிரம் வளையலாகுமாம்! இனி இந்தக் காலத்துக்கேற்பக் கூறவேண்டுமானால், காற் செருப்புங் கழன்றுபோகும்! அய்ஸ்கிரீமும் பெல்லாரிச் சிறைக் களியாகும். என்றும் அணிகிற 6 கெஜச்சேலை அன்று அவிழ்ந்து விடும், காதலால் உருகி மெலிந்த காரணத்தால்.

காதலெது? காமம் எது? என விளக்கப்படுவதில்லை. ஆனால் காதல் வேறு, காமம் வேறு எனக் கூறப்படுகிறது. காதல் உள்ளத்தின் பிணைப்பாம். காமம் உடற்பசியாம்! இது உண்மையானால் அழகற்ற குரூபியை எந்தப் பெண்ணும் விரும்புவதில்லை, அவனுடைய உள்ளத் தூய்மைக்காக. எந்த ஆணும் தன் இச்சைக்கேற்ப, அழகில்லாதவளைக் கண் எடுத்துங்கூடப் பார்ப்பதில்லை. வாலிப வெறியிலே, உணர்ச்சி கொந்தளித்துக் கொப்புளிக்க அவள் பெண், நான் ஆண் என்ற எண்ணத்தோடு, அவளது அழகற்ற தன்மையைப் பற்றிச் சிறிது கூடச் சிந்திக்காமல், அந்தப் பிறவி மாறுபட்ட இனம் என்ற எண்ணம் மட்டும் தலைதூக்கி, ஆண் பெண்ணையோ, பெண் ஆணையோ விரும்புவது காமம் என்று கூறப்படுமானால்—அழகற்றவனையோ, அழகற்றவளையோ, வெறும் உடலின்பத்துக்காக மட்டும் விரும்புவது காமம் என்று கூறப்படுமானால், காதல் என்பது அழகுணர்ச்சி என்று பொருள் படுகிறது. அதாவது அந்த ஆணழகன் எனக்குக் கணவனாகக்கிடைக்கமாட்டானா? என்ற ஏக்கம்தான் காதலாகிறது. அவன் அழகில் மயங்கி, அவனைச் சொந்தக் கணவனாக்கிக் கொண்டால், "என்றுமே கிடைக்கும் அந்த இன்பம் என்ற மறைமுகமான காமத்துக்குப்பெயர் காதலென்றாகிறது. காதலும், காமமும் ஒன்றென்றாகிறபோது, காதலுக்குத் தனிமதிப்பும், தெய்வீகத் தன்மையும், காமத்துக்கு இழிவையும் கற்பிக்கத் தேவையில்லை.

தெய்வீகத் தன்மைகளே ஆட்டங்காணுகிற நேரத்தில், இந்தக்காதலுக்கு அந்தத்தெய்வீகத் தன்மை கற்பிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாததுதான். காதல் நிரந்தரமான, மாறாத, மங்காத அன்பு என்று கூறப்படுவதோ, ஒத்துக்கொள்ள முடியாத வகையிலிருக்கிறது. என்றாவது, யாருக்காவது இந்த மாதிரிக் காதல் ஏற்பட்டதுண்டா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதிலாக அமைகிறது. மனிதப்பண்பே, மல்லிகை சலித்து, முல்லை தொடுக்கத் தேடுவது தான்! அப்படியிருக்க, காதலால் அவர்கள் வாழ்க்கை முழுதும், பிரிய முடியாதபடி கட்டிப்போடுவது என்பது முடியாத காரியம் மட்டுமல்ல—அறியாத தன்மையுங் கூட. பள்ளியிலோ, கல்லூரியிலோ, கிணற்றங்கரையிலோ, சினிமாவிலோ கண்டு, அவன் மனதை அவள் திருட, அவள் மனதை அவன் கொள்ளையிட, அவனை அவளோ, அவளை அவனோ, மணம் புரியாமல், உணவு உண்ண முடியாத நிலைகண்டு, "இருவரும் கலங்கி நிலையழிந்து, போன என் னுயிர் மீளவேண்டுமானால் அவளை அடையவேண்டும்" என்று அவன் கூற, "இயற்கை நிலை மாறி, கசந்திடும் பசும்பால் இனித்திடவேண்டுமானால், உண்ணுகிற உணவில் பலன் காண வேண்டுமானால், அவர் என் கணவர் ஆகவேண்டும்" என்று அவள் கூற, மணம் செய்து கொண்ட அந்த ஜோடிகள், கூடி வாழ்ந்த வாழ்வில், மகிழ்வு பொங்கியா வழிகிறது? இல்லையே! அடுத்த ஆண்டிலேயே, அவன், வேறொருத்தியைக்கண்டு இதழ் பூக்கிறான். ஆனால் அவள், பெண்ணைப் பயந்து பின்னித் தவண்டு, உள்ளுக்குள் குமுறி, வீட்டுக்குள் அடங்கிக் கிடந்து, முடங்கிப் பதுங்கி சூழ் நிலை உந்துகிற நேரத்தில், சுற்றுச்சார்பு, இழுக்கிற நேரத்தில், அவளும் வழுக்கி விழுந்து விடுகிறாள். கற்பு நடை முறையில் காட்ட முடியாது என்பது உண்மையாகி விடுகிறது. மாறுபட்ட வயதினர்க்கோ, வயதில் அதிக வித்தியாசம் உள்ளவர்க்கோ, இளைஞனுக்குக் கிழவி மீதோ, சிறுவனுக்குக் குமரி மீதோ, குமரிக்குச் சிறுவன்மீதோ, காதல் உண்டாவதாகக் கதைகூட இல்லை. கிழவனுக்கு மட்டும் மங்கை மீது காதல் உண்டாகும்.

இதோ அம்மையார் ஒருவர் அரற்றுகிறார் கேளுங்கள். "காதல்" அமைதி, கம்பீரம், தன்னடக்கம், சிரஞ்சீவித்தனம், அழியாத பற்று—இவ்வைந்து அங்கங்களை உடையது" என்கிறார். பின் அதைத் தொடர்ந்து அலைமோதுவதில் காதலைக் காண்பதாக கிறுக்குகிறார். 'வானத்துக்கும்' 'வையகத்துக்கும்' முடிச்சுப் போடுகிறார் காதல் கயிறு கொண்டு. பின் இராமரையும், சீதையையும் இழுக்கிறார். சுந்தர காண்டத்துக்கு விளம்பரம் தேடுகிறார். மேல் நாட்டினர் ஆராய்ந்த, பள்ளத்திற்கு நீர் ஓடும் என்ற தத்துவத்தைக் கொண்டு காதலைப்பரப்புகிறார். நதிகடலில் கலப்பதை, காதலன் காதலியைத் தழுவுவதாகக் கூறுகிறார். பின் "காதலில்லையேல், உலகமில்லை உலகமுள்ளளவும் காதலுண்டு" என்கிறார். பின் பாரதியுடன் கட்டுரையை முடிக்கிறார் அந்த ஆரிய அம்மையார்.

அந்தத்தோழியரை ஒன்று கேட்கிறேன். இராவணன் சீதையின் மீது கொண்டிருந்தது காதல்

## அனுபவ அறிவு குறைவுபட்டதே

# அனைத்துக்கும் காரணம்.

"கைவல்யம்"

★

ஒழுக்கம் வேண்டும், ஒழுக்கமாய் நடக்கவேண்டுமென்று பிரசங்க மேடைகளில் எல்லாம் சொல்லுகிறார்கள். சொல்லுகிறவர்கள் அநேகமாக சமய ஒழுக்கத்தையே நினைத்துச் சொல்லுகிறார்கள். கேட்பவர்கள் திருநீறுபூசி, நாமம்போட்டு, சிவசிவா! இராமராமா! என்று சொல்லிவிட்டாலும், அதைவிடப் பணக்காரப் பக்தர்கள் தெட்சணை வைத்துப் பார்ப்பான்காலில் கடவுளைக் கும்பிட்டாலும், ஒழுக்கமெல்லாம் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள்.

ஒழுக்கத்திற்கு நடை, முறை என்றே பொருள். சட்டசபையிலும், மாயவரம் முனிசிபாலிட்டி சபையிலும், வெற்றிலை பாக்கு சிகரெட்டு விவகாரம் வந்ததே ஒழுக்கமல்ல. தமாஷ் பேச்சும், சாமர்த்தியப் பேச்சும் ஒழுக்கமாகாது. சிறுமையும் பெருமையும் தெரிந்து கொள்ளுவது ஒழுக்கம். நம் இராஜ சபைக்கு மரியாதை செய்வது ஒழுக்கம், உண்மைக்குப் பரிந்துபேசுவது ஒழுக்கம். எதற்கும் தன்னலப் பேச்சு ஒழுக்கமாகாது. கோழைப் பேச்சு, தாட்சண்யப்பேச்சு ஒழுக்கமாகாது. எதையும் உண்மை விளக்கால் பரிசோதித்துப் பார்ப்பது ஒழுக்கம். எந்த ஒழுக்கத்திலும், நியாயத்திலும் குற்ற மிருக்கலாம். நியாயத்தைப் பொதுவாக்கித் தட்டிக் கொட்டித் தூற்றி அளந்து தூக்கி நின்றது ஒழுங்கு.

பெண்கள்பெண்களை ஆளமாட்டார்கள், ஒரு ஆண்தான் ஆளவேண்டுமென்று சுவாமி விவேகாநந்தர் சொன்னார். நமது ஜனங்களின் சுபாவங்களைப் பார்த்த பல அறிவாளிகள் கருத்தும் அப்படியே. அந்தக் கருத்தின் பேரில் தான் சுயராஜ்ஜியத்திற்கு நாம் தகுதியுடையவர்களல்ல வென்று சிலர் நினைக்கிறார்கள். சுயராஜ்ஜியம் வந்துகூட மனம் விரியவில்லை. பேச்சுப் பெரிதாயிற்றே ஒழிய மனம் பெரிதாகவில்லை. எல்லாம் எனக்கே சொந்தம் என்பதை நிலைநிறுத்த ஏமாற்றுகளும், தந்திரங்களும் குறையவில்லை. காங்கரஸ் உண்டாவதற்கு முன் நமது சமய ஜாதிப்பாட்டு எத்தனை சோகமாக விருந்ததோ, அத்தனை சோகமாகத்தான் சுயராச்சியம் வந்தபின்பு மிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நமக்கு அனுபோக அறிவு குறைவு பட்டிருப்பதேயாகும். நமது நாட்டு மேதாவிகளும், படித்தவர்களும் மாறுந்தன்மையான உலகத்தில், சென்ற காலத்து விதிகளையும் சம்பிரதாயங்களையும் நிலைநிறுத்தப்பார்க்கிறார்கள். ராஜாங்கத்தையும் அவ்வழியே செலுத்துகிறார்கள். செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம் என்பதை ஆலோசிப்பதில்லை.

நமது தேசத்தை முகமதியர் அரசாள ஆரம்பம் செய்வதற்குமுன்பு, குரான் தேசத்திய ஆல்பிரூனி என்பவர் நாடெல்லாம் யாத்திரை செய்தார். அவர் சிறந்து விளங்கிய தத்துவ ஞானி. கல்விப் பயிற்சி முதிர்ந்தவர். சமஸ்கிருதக் கலைகளையும் படித்தார். அவர் அக்காலத்தில் பார்த்தபடி இந்தியாவைப்பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். "இந்துக்கள், தத்துவ சாஸ்திரம், கவித் திறமை, வான சாஸ்திரம் முதலியவைகளைத் தெரிந்திருக்கிறார்கள்; ஆனால் பாமர ஜனங்களும், பெண்களும் புத்தியாலும், தேக பலத்தாலும் மிகவும் வருந்தத்தக்க நிலையைக்காட்டிலும் கீழாகவிருக்கிறார்கள். சன்மார்க்கத்திலும், ஆத்மப்பயிற்சி நிலையிலுங்கூட, ஒவ்வொரு விதத்திலும் மிதிக்கப்பட்டவர்கள். மனமும், சரீரங்களும் ஒன்று சேர்க்கப்படாமல் சமூக வாழ்க்கையிலும், மத விஷயங்களிலும், ராஜ்ஜிய நிலையிலும் சரியானபடி அணி வகுக்கப்படாமல் ஏராளமான கூட்டத்தவர்கள், வருஷா வருஷம் கஜினி மகமதுவின் தலைமையின் கீழ் படை எடுத்து வந்து கொள்ளை அடித்த முஸ்லிம்களைக்கண்டு, தூசிபோல் பறந்தோடினர்."

அதற்குப் பிற்காலம் பேபர் சக்கரவர்த்தியும் இந்துக்களிடம் எந்த அம்சத்திலும் புத்திக்கூர்மையாவது, தாமே கண்டு பிடிக்கும் திறனாவது, சாமர்த்தியமாவது கிடையாதென்று குறை கூறுகிறார். ஒற்றுமை என்பது இவர்களிடமிருக்க முடியாதென்கிறார். இவைகளெல்லாம் அந்நியர்களால் கூறப்பட்டனவாதலால் அதிகரித்துக் கூறப்பட்டிருக்கலாம். இவ்வளவு நிலைமைக்கும் இடங்கொடுத்துப்பார்த்தாலும் இவ்விஷயங்கள் உண்மை என்றே தெரிகிறது. தேவையான அறிவு குன்றியிருந்ததென்றே தெரிகிறது. இந்தக் குறையினாலேதான் இந்தியா தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டது.

படையெடுப்பையும், நமது சனங்களின் நிலைமைகளையும் பல நாள் கூடவிருந்து பார்த்த ஆல்பிரூனியும், நமது நாட்டைச் செயித்து சக்கரவர்த்தியாயிருந்த பேபரும் எழுதி வைத்ததைப் படித்த இராமதீர்த்தர் சொன்னார். இராமதீர்த்தர் எழுதினதை நான் படித்து உங்களுக்குச் சொல்லுகிறேன். சனங்களின் அறிவைத் தடுத்து, பிராமணனின் எச்சில் சோறு சூத்திரனுக்கு என்றும், விரிந்தவாழ்வு சூத்திரனுக்கில்லை என்றும், தாழ்ந்த ஜாதியான் பலகாரம் பண்ணி உண்ணக் கூடாது; பால், தயிர், மோர் குடிக்கக் கூடாது, அவர்களுக்கு விற்கக் கூடாது என்று அதிகார ஆக்கினைகளைச் செலுத்தி ஜனங்களைப் பாழ்படுத்திய சமஸ்கிருத பாஷைக் களஞ்சியத்தைப் படிப்பாக வைக்க வேண்டுமாம்! பார்ப்பார்கள் ஆலோசித்தாயிற்று, ஒன்றுகூடிக் கூட்டம் போட்டாயிற்று, பெரிய பார்ப்பார்கள் பிரசங்க அபிப்பிராயம் சொல்லியாயிற்று, மற்ற பெரியவர்களைக் கொண்டு ஆமோதித்தும் ஆயிற்று. இனிப் பார்ப்பார வைப்பாட்டி மக்களான பணக்காரச் சூத்திரர்கள் பணம்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

---

தானே! அதிலே சிரஞ்சீவித்தனம் இருந்தது, அமைதியுமிருந்தது. அவர் கூறுகிற காதலின் இலக்கணம் அத்தனையும் பொருந்தித்தான் இருந்தது. கற்புக்குச் சப்பைக்கட்டுதான் இந்தக் காதல்.

காதல் ஒரு கற்பனை. ஆண் பெண் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்து, இருவர் அழகிலும் சொக்கிப்போய், விரும்பும் தன்மைக்குப் பெயர் காதல் என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கு இலக்கணம் கூறுகிறார்களே சிரஞ்சீவித் தன்ம், தூய்மையானது என்றெல்லாம்அவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது. என்னதான் காதல் இருந்தாலும், கதவோரத்தில் நிற்கக்கூடாது, வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கவேண்டும் என்ற அடக்குமுறைத்தர்பார்கள், சமத்துவமற்ற எதேச்சாதிகார மனப்பான்மை முதலியன இருக்கும் வரை, காதல் மணத்தில் இருக்குமந்த ஓரிரண்டு ஆண்டு இன்பவாழ்வும் குலைந்து விடும். ஆணினத்திற்கும், பெண்ணினத்திற்கும் சமவுரிமை கொடுத்து, காதல் என்று கூறப்படுகிற பருவ உணர்ச்சியோடு இழையோடிய அழகுணர்ச்சியை நடைமுறைக்குக் கொண்டுவந்தால், வாழ்வில் அமைதிகாண இயலுமே தவிர, இந்தப் பூசிமெழுகுகிற போக்கு கவைக்குதவாது.

# பெரியார் அவர்களின் சொற்பொழிவுத் தொகுப்பு.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

## நீங்கள் அறியவேண்டும்.

திராவிட கழகத்தின் கொள்கைகளைப்பற்றியும், திராவிட கழகத்தின் அவசியத்தைப்பற்றியும், திராவிட கழகத்தின் எதிர்காலத்தைப் பற்றியும் நீங்கள் அறிய வேண்டியது மிகமிக அவசியம். திராவிட கழகம் என்பது இச் சென்னை மாகாணத்தில் 100-க்கு 95 பேராயுள்ள பெரும் பான்மை மக்களின் நலனுக்காகப் பாடுபட்டுவரும் ஒரு கழகம். அதாவது ஆரியரல்லாத, தற்போது சூத்திரர் என்று இழிவாகக் கருதப்பட்டுவரும் பிராமணர் அல்லாத மக்களின் நலத்திற்காகப் பாடுபட்டு வரும் கழகம். திராவிட கழகத்திற்கு வேறுபெயர் கூறவேண்டுமென்றால் ஆரியரல்லாதார் கழகமென்றோ, அல்லது சூத்திரர் கழகமென்றோதான் அழைக்கவேண்டியிருக்கும். சூத்திரர் என்றால் பார்ப்பனரின் தாசி மக்கள், பஞ்சமர்கள், சண்டாளர்கள், 4 வது ஜாதி 5 வது ஜாதி என்று பொருள்: ஆரியர் அல்லாத மக்களுக்கு சூத்திரர் என்ற பெயரை நாங்களாகக்கற்பித்துக் கொண்டோம், வகுப்புத்துவேஷத்தை வளர்ப்பதற்காக, என்று சிலர் கூறுவது போல் நீங்கள் யாரும் நினைத்துவிடக் கூடாது.

## சூத்திரர் என்பது பார்ப்பனர் படைப்பே.

சூத்திரர் என்ற பெயர் ஆரியரல்லாத மக்களுக்கு ஆரியர் கொடுத்த பெயர். சூத்திரர் என்று நம்மை இழிவாக அழைத்ததுமட்டுமல்ல அவர்கள் தங்கள் வேதத்திலும், சாஸ்திரங்களிலும்கூட அப்படித்தான் எழுதி வைத்துள்ளார்கள். இதிகாசங்களிலும் இதையே வலியுறுத்தி இருக்கின்றனர். கடவுள் பேரால் நம்மைச் சூத்திரர் என்றுதான் அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். ஆகவே இது நம்மால் வேண்டுமென்றே கற்பிக்கப்பட்டதல்ல. பார்ப்பனர் கற்பித்ததுதான்.

## திராவிடர் என்பது கற்பனையல்ல.

திராவிடர் என்ற பெயர் அப்படி யாராலும் கற்பிக்கப் பட்டதல்ல. ஆரியர் என்ற பெயரும் அப்படித்தான். என்று மக்கள் அவரவர் வாழ்ந்துவந்த தேசத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ப, அமைந்திருந்த அங்கமச்ச அடையாளங்களைக் கொண்டு பல இனப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனரோ, அன்று இரண்டு வெவ்வேறு இனங்களுக்குக்கொடுபட்ட பெயர்தான் திராவிடர் ஆரியர் எனப்படும் பெயர்கள். இதே சமயத்தில் கொடுபட்ட பெயர்தான் மங்கோலியர் என்பதும் நீக்ரோக்கள் என்பதும். உஷ்ணமான ஆப்பிரிக்க காட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சற்று கருமையான மக்களை நீக்ரோக்கள் என்று அழைத்தனர். நல்ல குளிர்ப்பிரதேசமான மத்திய ஆசியாவில் வசித்து வந்த தவிட்டு நிற மக்களுக்கு ஆரியா என்று பெயர் அளித்தனர் அதற்கடுத்தாற்போல் சற்று குட்டையாகவும் சப்பை மூக்குடனும் சைனா ஜப்பான் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை மங்கோலியர் என்று அழைத்தனர். இப்பிரதேசங்களுக்குத் தெற்கே சற்று சமசீதோஷ்ணமான சமவெளிகளில் வாழ்ந்த தென்னாட்டு மக்களைத் திராவிடர் என்று அழைத்தனர்.

## பிரிவுக்குக் காரணம் அங்கமச்சமேயன்றி பிறப்பு வேறுபாடல்ல.

ஆகவே அன்று அங்கமச்ச அடையாளங்களைக்கொண்டுமக்களைப்பலஇனங்களாகப்பிரித்தார்களேஒழிய,ஒருவன் கடவுளின் நெற்றியில் இருந்து தோன்றியவன் என்றோ, மற்றொருவன் கடவுளின் பாதத்திலிருந்து தோன்றியவன் என்றோ, அல்லது கண்ணிலிருந்து வந்தவன், காதிலிருந்து வந்தவன், மூக்கிலிருந்து வந்தவன் என்றோ பிரிக்கவில்லை. இதை நான் பேர் ஊர் தெரியாத எவனோ, மாட்டுக்கும் மனிதனுக்கும் பிறந்த எவனோ எழுதியதாகக் கூறப்பட்டு வரும் எந்த சாஸ்திரங்களைப் பார்த்தோ, வேதங்களைப் பார்த்தோ கூறவில்லை. சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களின் முடிவை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டதும், அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டதும், உங்கள் நாலாவது அய்ந்தாவது வகுப்புப் படிக்கும் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகமாக இருந்து வருவதும், அசல் ஆரியப் பார்ப்பனர்களால் எழுதப்பட்டிருப்பதுமான புத்தகங்களைப் பார்த்துத்தான் கூறுகிறேன்.

## பார்ப்பனர்களின் பசப்பான பொய்யுரை.

என்னப்பா இன்றைக்குக் கூட்டமாமே என்ன விசேஷம் என்று யாராவது இன்று ஒரு ஹோட்டல் அய்யன் கேட்டிருப்பாரானால் அவர் என்ன கூறியிருப்பார் தெரியுமா. "எவனோ ஈரோட்டிலிருந்து ஒரு அயோக்கியன் வருகிறானாம். அவன் மைலாப்பூர் பார்ப்பான் ஒருவனை ஏதோ பணங்கேட்டானாம், அவன் கொடுக்க மறுத்து விட்டானாம் அதிலிருந்து பார்ப்பனர்களைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறான். அதுக்கேன் போப்போறீங்க. அவ்வளவும் பார்ப்பனத் துவேஷமாகவே இருக்கும்" என்றே கூறியிருப்பான். அப்படித்தானாகும் என்று நினைத்தே சற்று தயக்கத்துடன்தான் நீங்களும் வந்திருப்பீர்கள்.

யார் என்ன கூறியிருந்தாலும் சரியே. நான் கேட்கிறேன், பண்டிதர்கள் பாவலர்கள் யாராயிருந்தாலும் பதில் கூறும்படி சவாலிட்டுக் கேட்கிறேன்.

## "இந்தியா", "இந்து" இன்று வந்த பெயர்கள்.

இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா என்ற பெயரோ, ஹிந்துக்கள் என்ற பெயரோ, எங்காவது வழங்கப்பட்டிருந்ததாக உங்களில் யாராவது கூறமுடியுமா? கூறமுடியுமானால் அதற்கு உங்கள் வேதத்திலோ, சாஸ்திரத்திலோ, இதிகாசங்களிலோ ஒரே ஒரு ஆதாரமாவது காட்ட முடியுமா? ஆதாரம் கண்டோம் என்று யாராவது சொல்லட்டுமே பார்க்கலாம்! யாராவதுசொல்வார்களானால் மன்னிப்புக்கேட்டுக் கொள்ளத்தயாராயிருக்கிறேனே! நன்றியறிதலோடு என் தவறைத் திருத்திக்கொள்ளவும் தயாராய் இருக்கிறேனே! 200 ஆண்டுகளுக்கு முன்பு பூகோளத்தின்படி இத்தேசத்திற்கு, இந்தியா என்று பெயர் இருந்ததாக யாராவது காட்ட முடியுமா? இந்தியா என்பதும், ஹிந்துக்கள் என்பதும் நடுவாந்தரத்தில், அதுவும் சமீபத்தில் ஆரியர்களால் கற்பித்துக்கொள்ளப்பட்ட பெயர்களே ஒழிய பழைய மூலப் பெயர்கள் அல்ல. ஆனால் ஆரியர், திராவிடர் என்ற பெயர்கள் மட்டும் என்று தோன்றியனவோ என்றுகூட வரையறுத்துக்கூற முடியாத அளவுக்குப் பழமைப் பெயர்கள். ஆரியர் அல்லாத திராவிடர்களைத் தான் ஆரியர்கள் தஸ்யுக்கள் என்றும், சூத்திரர் என்றும், இழிவான வேலைகளுக்கே உரியவர்கள் என்றும், அரக்கர்கள், இராட்சதர்களென்றும்கூறியிருக்கின்றனர். இதை நாம் கூறவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பண்டித நேரு கூட தம் மகளுக்கு எழுதிய கடிதத்தில், இராமாயணத்தில் குரங்குகள், அரக்கர்கள் என்று பழித்துக் கூறப்படுவது திராவிடர்களைப் பற்றித்தான் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது புல்தரை தேடிவந்த ஆரிய லம்பாடிக் கூட்டம், திராவிடர்களோடு போராடித் தமக்கு அடிமைப்பட்டுப் பணியாட்களாக உழைக்க ஒப்புக்கொண்டவர்களைச் சூத்திரர், பஞ்சமர் என்றும், தம்மை எதிர்த்துத் தம் ஆட்சியைவெறுத்து ஓடியவர்களை அரக்கர்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# 1948 மே தினம்.

## ஆரியத்தின் அழிவிற்கு அறிவிப்பு.

"புத்ததாசன்"

★

மேதினம்! வாழ்வில் சுரண்டப்பட்டு வளமிழந்து நலிந்து கிடக்கின்ற மக்களின் விடுதலை விழா! உரிமைப் போராட்டத்தின் ஆரம்ப விழா! உரிமை வேட்கை கொண்ட மக்களின் ஆசையையும், உணர்ச்சியையும், உள்ளத் துடிப்பையும் உலகிற்கு உணர்த்தியநாள். "விழித்தெழுந்தோம்! வீறுகொண்டோம்! உரிமையையும், விடுதலையும் பெறுவோம்" என உலக பாட்டாளிமக்கள் உறுதிகொள்ளும் நாள். உலகமக்கள் எங்கும் உரிமையுடன் கொண்டாடும் புரட்சித்திருநாள்.

நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக, இரவு பகலென்று பாராமல், ஓயாமல் உழைத்து உழைத்து உருக்குலைந்து போய், தன் சொந்த வாழ்வில் இல்லாமை, ஏழ்மை முதலியவற்றால் பீடிக்கப்பட்டு, அடிமையாக்கப் பட்டு துன்ப வாழ்வு வாழும் மக்களின் விடுதலை விழா!

இயற்கையின் வளம் நிறைந்த உலகத்தில், வாழ்க்கையின் வசதிகள் பிறரால் வஞ்சிக்கப்பட்ட காரணத்தால், வாழ்வையே பெரிய தோர் சுமையாக கருதிக் கொண்டு, வாழ்வில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் உள்ளத்தில் "வாழப்பிறந்தோம் வாழ்ந்துதானாகவேண்டும்" என்ற உறுதிகொண்டு, சுரண்டி வாழுகின்ற கூட்டத்தாருடன் போராடினால் வாழ்க்கையைப் பயனுள்ளதாகவும், சுவை நிறைந்ததாகவும் மாற்றியமைக்க முடியும் என்ற உறுதியை உண்டாக்கியது மேதினம்!

அபலைகளாக வாழ்ந்து கொண்டிருந்த பலகோடி மக்களின் வாழ்வில் அமைதியையும், இன்பத்தையும் உண்டாக்கியது மேதினம்!

செல்வச் சீமான்களாக இருக்கின்றோம் என்ற காரணத்தால், மக்களை அடிமையாக்கி அவர்களின் உழைப்பை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழ்ந்துவிட முடியும் எனக் கனவு கண்டு கொண்டிருக்கும் பணத்திமிர் பிடித்த முதலாளித்துவச் செயலுக்கு சாவு மணியடிக்கும் நாள் மேதினம்!

"சடசடெனச் சரிந்ததுபார் ஜாரின் ஆட்சி" என்ற பரணி பாடுமளவு, மக்கள் உள்ளத்தில் மண்டிக்கிடந்த மடமையையும், அடிமைத் தனத்தையும் அகற்றி, புரட்சிப்பாதையில் அழைத்துச் சென்று புதியதோர் பொதுவுடமை ரஷியாவை அமைக்க மேதினத்தைப்பயன்படுத்தினார் மாவீரன் லெனின். இறுதியில் வெற்றிபெற்று ரஷியாவில் புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்தினார்.

1886 ம் வருடம் மே மாதம் 1 ந் தேதி அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கம் ஒன்று திரண்டு "8 மணிநேரம் வேலை" என்ற கோரிக்கையை வற்புறுத்தக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்துவதென்று தீர்மானித்தனர். அதன்படி சிகாகோ நகரத்தில் பிரமிக்கத்தக்க அளவு தொழிலாளர் அணிவகுப்பு நடந்தது. இது எப்படி முதலாளித்துவத்திற்குப் பிடிக்கும்? அதிகாரவர்க்கத்தின் படைகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட தொழிலாளிகளின் மேல் குண்டுமாரி பொழிந்தனர். தொழிலாளிகளின் ரத்தம் வெள்ளமாக வீதியெங்கும் ஓடியது. இந்தக் கோர நிகழ்ச்சிகளினால் தொழிலாளர்களின் உணர்ச்சியும், எழுச்சியும் அடக்க முடியவில்லை. இதன் பிறகுதான் தொழிலாளர்களிடையே ஓர் புத்துணர்ச்சி ஏற்பட்டது. இந்தப்புனிதநாளை, பாட்டாளி மக்கள் விடுமுறை நாளாகக் கொண்டாடவேண்டுமென்று 1889ல் பாரிசில்நடைபெற்ற சர்வதேசச் சமதர்ம மாநாட்டில் தீர்மானித்தார்கள். அதன் பிறகுதான் வாழ்வில் அடிமையாக அல்லலுறும் மக்கள், மேதினத்தை விடுதலை நாளாகக் கொண்டாடுகின்றனர்.

பணக்கார வர்க்கத்திடம் சிக்குண்டு பரிதவிக்கும் ஏழைப் பாட்டாளி மக்களுக்கு மட்டுமல்ல, மேதினத்தை விடுதலை நாளாக கொண்டாடும் உரிமை. நம்மைப்போன்று 100க்கு 97பேர்களாக இருந்தும் 100க்கு 3பேர் உள்ள ஒரு சிறு கூட்டத்தினரால் அடிமையாக்கப்பட்டு, சமுதாயத்தில் சூத்திரர்களாக்கப்பட்டு, கூலிகூட கேட்காமல் வேலைசெய்ய வேண்டும் என்று கூறுகின்ற புத்தகங்களைத் நம்முடைய வேதங்களாக ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டு, நமது மனைவி மக்களை அவன் (பார்ப்பான்) தனது நரம்புத் துடிப்பைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டால், அதற்கும் பதில் சொல்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற சட்டதிட்டங்களை ஏற்படுத்தி இருக்கும், இந்து மதத்திற்கு அடிமையாக்கப்பட்டிருக்கும் நமக்கும் கூடத்தான், மேதினத்தை விடுதலை நாளாக கொண்டாடும் உரிமை மட்டுமல்ல கடமையும் ஏற்பட்டிருக்கிறது.

நாம் இன்று வாழ்வில் வளமிழந்து உரிமைகள் பிறரால் பறிக்கப்பட்டு உணர்ச்சியற்ற நடைப்பிணங்களாகத்தான் வாழுகின்றோம். "உண்பதுவோ பிடிசோறு, உடுப்பதும் நாலுமுழம், உறங்குவது சிறு குடிசை. இதுவன்றி வேறொன்றும் யானறியேன் பராபரமே" என்ற நிலையில் அடிமைகளாக அர்த்தமற்ற வாழ்வு வாழ்கிறோம். நாம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் பொருளாதாரக் கீழ் நிலையும் பணக்காரர்களின் சுரண்டலும்தான் என்று கூறிவிட முடியாது. இவ்வையனைத்திற்கும் உண்மைக் காரணம் பார்ப்பான்களின் சதிச் செயல்களும் மதம் நமக்கு ஊட்டியிருக்கும் மடமையுந்தான். இதனின்று நாம் விடுபட்டால் ஒழிய வாழ்வில் கௌரவத்துடனும், இன்பத்துடனும், உலக மக்களோடு மக்களாகவும் வாழ முடியாது என்பதைத் தலைவர் பெரியார் அவர்கள் பன்னெடுங்காலமாகவே விளக்கிக் கூறிவருகிறார்கள். ஆகையால் தான் மக்கள் முன்னேற வேண்டுமாயின் முதலில் மதத்தையும்—அதனால் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் மடமையையும், பார்ப்பனியத்தையும்—அதனால் திராவிட சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பாகுபாடுகளையும், அர்த்தமற்ற அநாகரீகச் செயல்களையும் அகற்ற வேண்டும் என்று கூறுவதுடன், அதையே எங்கள் திட்டமாகவும், செயலாகவும் கொண்டிருக்கிறோம். இதை யார் வகுப்புத் துவேஷம் என்றோ, பார்ப்பனத் துவேஷமென்றோ சொன்னாலும் எங்களுக்குக் கவலையில்லை. தோழர் சொக்கலிங்கத்தைப்போல, அவர்களும் விரைவில் உணர்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

எது எப்படி இருந்த போதிலும் இன்று எங்களுடைய கொள்கைகள் நாட்டில் காட்டுத் தீபோல் பல்வேறுபட்ட உருவங்களில் பரவிக்கொண்டிருக்கிறது. மந்திரிசபை முதல் மண்மேட்டுக் குடிசையில் வாழ்பவன் வரையும், கல்லூரியில் பயிலும் மாணவர் முதல் கல்வியே இன்னதென அறியாத பாமரர்வரையும் நம்முடைய கொள்கைகள் பரவி வருகிறது. இதைக் கண்டு பார்ப்பனர்கள் பதறுகின்றனர், காங்கரஸ் தோழர்கள் கவலைப்படுகின்றனர், சமதர்மப் புலி ஜெயப்பிரகாஷ் நாராயணன் கிலிகொண்டு விட்டார், கம்யூனிஸ்ட்காரர்களின் பொதுவுடமை குரலும் கம்மி விட்டது. நாம் வெற்றிப் பாதையில் தலைநிமிர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.

1946மே மாதம் நமது திராவிட வீரர்களின் படையை அணி வகுத்து ஒத்திகை நடத்தினோம் மதுரையில். மதுரையில் நடந்தது கருப்புச்சட்டை மாநாடு மட்டுமல்ல! அது ஆரியத்திற்கு விடுத்த அறைகூவல் தான். இதற்குப்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# இன்றைய சுதந்தரம்.

"வி. துரைசாமி"

★

சுதந்தரப் பேரிகை திக்கெட்டும் ஒலித்தது. சிறைசென்ற வீரத் தியாகிகள் மேடைமீது ஏறி வீர கர்ஜனை செய்தார்கள். எங்கும் விளக்கொளி எதிரொலித்து வீட்டையும், நாட்டையும் பிரகாசிக்கச் செய்தது. இன்னிசைகளின் விருந்தும் ஏகபோகமாக பரிமாறப்பட்டது. ஆகஸ்ட் 15தை அழகுற நடத்திஅன்பர் பலரின் ஆமோதிப்பைபெற்று, "சுதந்தரத்தின் எல்லையை அடைந்து விட்டோம். பயமில்லை மனமே" என்று அரியணையில், ஆனந்தமாக வீற்றிருந்தனர் மந்திரிகள். அர்த்தராத்திரியில் சுதந்தரம் பிரகாசித்தது அன்றோர் நாள்.

ஆம்; ஆகஸ்ட் 15 ஆனந்தத்தின் எல்லையை அடைந்திருந்தது. அன்பர்களின் ஆசியைப் பெற்றது. அறிஞர்களின் எழுத்தோவியங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அளவுக்கு இருந்தது. பத்திரிகை உலகே ஒருவிதப்பரபரப்பை உண்டு பண்ணிற்று. சுதந்தரத்தின் மகிமையை பன்னி பன்னி பார்ப்பன, பனியாப் பத்திரிகைகள் மக்களுக்கு உபதேசித்தன. அதே நேரத்தில் உலகறிந்த உண்மைப் பத்திரிகைகள் சுதந்தரத்தின் வண்டவாளங்களை முன்கூட்டியே அறிவுறுத்தின.

ஆனால் இன்று நாம் கண்டதென்ன? மக்கள் மகிழ்ச்சியின் ஒருபகுதியாவது கிட்டிற்றா? பாட்டாளிகளின் பொருளாதாரம் சீரடைந்ததா? தாழ்த்தப்பட்ட தோழனின் தளர்ந்த வாழ்க்கையைத் தட்டி எழுப்பிற்றா?

அதுதான் இப்பொழுதைய மக்களின் கடமை. சுதந்தரத்தின் எல்லையை எட்டி விட்டோம். இனி என் ராஜ்ஜியம் என்று, ஆனந்தப் பள்ளுப் பாடினோம். ஆனால் சுதந்தரம்கிடைத்தது, சோற்றுக்கு வழியின்றி விழிக்கிறோம் என்று மக்களின் ஓலம் திக்கெட்டும் கேட்கிறதே தேசியத் தோழனே! கொஞ்சமாவது அகக்கண் கொண்டுபார்த்தாயா? பார்த்துப் பதில் என்ன கூறுவாய்? வெட்கம் கொண்டு தலையைத் தொங்கப் போடுவாய்!

இவ்வளவுதானே! வீரத்தியாகிகளின் பெயரை கூறி வீர கர்ஜனை செய்த தேச பக்தனே! வீரத்தியாகிகளின் உதிரம் இப்படிப்பட்ட சுதந்தரத்துக்குத்தான் பயன்பட்டதா? நாங்கள் கூறவில்லை. இதோ மக்களின் பெருமூச்சு கூறுகிறது.

வீரத்தியாகி வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரைச் சொல்லியும், திருப்பூர் குமரன் பெயரைச் சொல்லியும், பல எண்ணற்ற லட்சியவாதிகளின் பெயரைச் சொல்லியும் விவேகத்துடனும், மகிழ்ச்சியுடனும், உணர்ச்சியுடனும் உறுமிய தேசியத் தோழர்களே! பயிர் வகைகளையும், நிலக்கடலையும் ஆகாரப் பொருள்களாக உட்கொள்ளும் அளவுக்குச் சுதந்தரம் பயன்படுகிறதே என்று இதோ! மக்களின் உள்ளக் குமுறல் கேட்கிறது.

ஆடுவோம் பள்ளுப் பாடுவோம், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணர்களுக்கு உழைத்து உடலம் ஓயமாட்டோம் என்றும், பலமுறை எங்கும் ஒலித்த இனிய கீதங்களைப்பாடி மகிழ்வித்த மகானுபாவர்களே! வேலையின்றித் தவிக்கும் வேலப்பனையும், ஒடுங்கிய வயிற்றுக்கு உணவில்லாமல் ஊர்கள் தோறும் தவிக்கும் உழைப்பாளிகளையும் கண்டு என்ன சமாதானம் கூறுகிறாய்? இதோ விவேகியின் எண்ணத்தின் எதிரொலி.

கண்டோம், பட்டினிப் பட்டாளத்தை சுதந்திர நாட்டிலே, காணக் கண் கூசுகிறதே என்று மனம் நொந்தோம். வீணர்களின் கும்மாளத்தையும் கண்டு மிரளுகிறோம்.

அதோ! ஒட்டிய கன்னங்களுடனும், உலர்ந்த உதடுகளுடனும் எலும்புக்கூடு போன்று காட்சி அளிக்கும் தொழிலாளியைப்பார். அதேநேரத்தில், தொந்தியைத் தழுவும் பூணுலையும் காற்றிலே நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கும் குடுமியையும், வயிற்றைத் தடவிக் கொண்டு ஏப்பம் போடும் பூசுரனையும் பார்.

இதோ! மோகனப்புன்னகையுடன் சோபாவில் வீற்றுக் கொண்டு மோகனாங்கியுடன் கேளிக்கையாய் உல்லாசமாகப் பொழுது போக்கும் வீணர்களின் படப்பிடிப்பைப்பார். அதே நேரத்தில், மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு "செல்லி, தஞ்சை ஜில்லாவுக்கு போவோம் புறப்படு, புழைப்புக்கு சீறன்னு சொல்லறாங்க" என்று பெருமூச்சு விடும் கோர ஒலியைக் கேள்.

அல்வா, சிலேபி, காபி, வில்ஸ் சிகரெட், பழவகைகள் காட்சி அளிக்கப் படாடோபமாக வீற்றிருக்கும்மார்வாடியைப்பார். அதே நேரத்தில் கன்னத்தில் கைவைத்து கவலையேஉருவாகக்காட்சி அளிக்கும் தொழிலாளியைப்பார்.

தேசியத் தோழனே! இன்றைய சுதந்தரம் எப்படிப்பட்டது? யாருக்கு பயன் படுகிறது என்று சிந்தித்தாயா? இனிமேலாவது சிந்திப்பாயா? அன்றொரு நாள், "விடுதலை" பத்திரிகை கூறிற்று, "இன்றைய சுதந்தரம் ஒருகானல் நீர்" என்பதை. உள்ளத்திலுள் பதிய வைத்தாயா? 'அடிமைப்படுத்தும் ஆக்ரமிப்பு வேலை, இன்றைய சுதந்தரம் என்று பன்முறை பொன் மொழியால் பகன்றாரே, அறிவுத்தந்தை 'பெரியார்'. உணர்ந்தாயா?

காங்கரஸ் அடைக்கலம் என்று கருதினாய். காலம் பாடம் கற்பிக்கிறது. கடைப்பிடி. எந்தத் தேசீயத் தோழன் ஆர்வத்துடன் சுதந்தரத்தை வீறுகொண்டு விமரிசையாகக்கொண்டாடினானோ, அவன் காலத்தின்கடும் வெயிலினால் காய்கிறான். சிறை சென்று ஆகஸ்ட் புரட்சியை வெற்றி என்று எவன் கடைப்பிடித்தானோ, அதே தேசீயத் தோழன் அதேகரத்தால், சுதந்தரம் வந்தது, மக்கள் சோற்றுக்கு வழிஇல்லை என்று மனம்நொந்து, உணவு மந்திரிக்கு மகஜர் எழுதி அனுப்புகிறான். எந்தப் பார்ப்பனனாவது பஞ்சத்தின்பிடியில் சிக்கிச் சீரழிகிறானா? உணர்ந்து எப்பொழுதுஅறிவின் எல்லையைக்கடைப்பிடிப்பாய்? காங்கரசின்ராஷ்டரபதி கிருபாளினி முதற்கொண்டு சாதாரண காங்கரஸ் நண்பன் வரையில், "என் அருமை சுதந்தரமே நீ, கள்ள மார்கட்காரனிடமும் சூழ்ச்சிக் கும்பலிடமும் சிக்கிச் சீரழிகிறாயே! இதற்காகவா, அருமையாக ஆனந்தப் பள்ளுப் பாடினோம், என்று கதறுகிறார்கள்

# போற்றவேண்டியது யாரை?

"வாலறிவன்"

சூயஸ் கால்வாயை வெட்டி முடித்தான் பர்டினண்டி லெஸ்-ஸப்ஸ் என்ற பிரஞ்சுக்காரன். சூயஸ் கால்வாயை வெட்டினான், கிழக்கின் வாசலை அதனால் திறந்தான். புகழ் அவன் மேல் வந்து குவிந்தது. "கிழக்கின் வாசலைத் திறந்தயான், அதோ வட அமெரிக்காவிற்கும், தென் அமெரிக்காவிற்கும் இடையேயுள்ள அச்சிறு பூசந்தியினிடையே ஒரு கால்வாயை வெட்டி மேற்கின் வாசலை யுந்திறப்பேன்" என்றான். பணம் கேட்டான். பணத்தை லட்சக் கணக்கில் வாரிக்கொடுத்தனர், பிரெஞ்சுமக்கள். இயலுமா என்று கூட அவர்கள் அய்யப்படவில்லை. ஏன்? அவன் தான் முன்பே சூயஸ் கால்வாயை வெட்டி வெற்றி பெற்றவனாச்சே. மலைகளைக் குடைந்தாகவேண்டும். 'வெருயெளி' தென்றான். அப்பொழுது அவனிடம் யாராவது போய், "அங்கே மஞ்சள் சுரம் என்ற ஒரு வித நோய் வருகிறது. அது உன் வேலையை நிறைவேற்ற விடாது" என்று கூறியிருப்பானே யாகில், சொன்னவனை அவன் எள்ளி நகையாடியிருப்பான்.

உலகிலேயே மிக விலையுயர்ந்தனவும், மிக்க அற்புதமான வேலைப்பாடமைந்தனவும், மிக நுண்ணியனவுமான இயந்திரங்களுடனும், பல்லாயிரந் தொழிலாளர்களுடனும், கோடிக்கணக்கான பிராங்குகளுடனும், பனாமா பூசந்தியைப் போயடைந்தான் பர்டினண்டி லெஸ்ஸப்ஸ். இயந்திரங்களை நிறுவினான். தொழிலாளர்கள் வேலையிலீடுபட்டனர்.

வேலை செய்து கொண்டிருப்பார்கள். கொசுக்கள் வந்துட்காரும் அவர்களுடல்கள்மீது. உட்காருவது அவர்களுக்குத் தெரியாது. மெல்லிதாகச் சுறுக்கென்று கடிக்கும்; பார்த்தால் கொசு. கையால் துடைத்து விடுவார்கள். பயனில்லை; அந்தச் சிறிது நேரத்திற்குள்ளே சாக்காடு செலுத்தப்பட்டது உழைப்பாளியின் உடலுக்குள்ளே! அய்ந்தாறுமணிகளுக்குள் காய்ச்சல்; இரண்டு மூன்று நாட்களில் ஆள் 'குளோஸ்'. அக்கொடுங் காய்ச்சல் தான் மஞ்சள்சுரமெனப்படுவது. பனாமா கால்வாயை வெட்டப் போனவர்களைக்கொட்டிக்குவித்தது அந்தக் கொசு. ஆனால் அந்தக் கொசுதான் கொலைஞன் என்று திட்டமாக யாருக்கும் தெரியாது. ஒருவரல்ல, இருவரல்ல, இருபதினாயிரம் பேர் பலியாயினர் அந்த மஞ்சள் காய்ச்சலுக்கு. மருத்துவர் என்னென்னவோ செய்தனர். எவ்வளவோ பணம் செலவிட்டான் பர்டினண்டி லெஸ்ஸப்ஸ். முடிவில் மஞ்சள் சுரத்தை முறியடிக்க முடியாது போகவே, எஞ்சியிருந்த மக்களோடு தன்னாட்டிற்கு ஓட்டம் பிடித்தான். சூயஸ் கால்வாயை வெட்டி வெற்றி பெற்றவன் பனாமா கால்வாயை வெட்ட முடியாதோடினான். நிறுவிய இயந்திரங்களை அப்படி அப்படியே விட்டு விட்டு ஓடினான்.

பனாமா கால்வாய் தோல்வி, இயந்திரக் கலை வரலாற்றிலேயே பெரியதொரு தோல்வியாகும். அறுபத்து அய்ந்து கோடி ரூபாய் பாழிலே இறைக்கப்பட்டது. இருபதாயிரம் மக்கள் மாண்டொழிந்தனர்.

பன்னிரண்டாண்டுகள் உருண்டோடின. லெஸ்ஸப்ஸால் நிறுவப்பட்ட இயந்திரங்கள் மீதெல்லாம் கொடிகளும் செடிகளும் படர்ந்தன, மஞ்சள் சுரத்தின் வெற்றியைக் கொண்டாடுவான் வேண்டி! அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் போரொன்று மூண்டது. கியூபாவின் தலைநகரிலுள்ள போர் வீரர்கள் மஞ்சள் காய்ச்சலால் மாய நேரவே அமெரிக்க சர்ஜன் ஜெனரல் "மஞ்சள் காய்ச்சலின் மாய காரணத்தைக் கண்டறிய ஆராய்ச்சி நடத்த விருப்பம் உடையவர் யார்", என்று கேட்டான்.

ஜேம்ஸ் கேரால், W. லெஸியர், வால்டர் என்னும் தன்னலமற்ற தகைமைசால் மருத்துவர்கள் அவ்வரிய அபாயமான வேலையைச் செய்ய முன் வந்தனர். அந்தக் காலத்தில் எவனாவது கொசுக்களைப்பற்றிப் பேசினால் அவனைப் பைத்தியக்காரன் என்பார்கள் மக்கள்! பன்னெடுநாட்கள் ஓயாதுழைத்ததின் பயனாலும், நுண்பெருக்கியில் (Microscope) கண்கள் பூத்துப் போமாறு பார்த்துப் பார்த்து ஆராய்ச்சி செய்ததின் பயனாலும், பல்வேறு நோய்கள் பரவுதற்குக் காரணம் பல்வேறு கொசுக்கள் என்ற உண்மையைக் கண்டு பிடித்தான் மேன்ஸன் என்ற மேனாட்டறிஞன். அவனது தூண்டுதலினால்தான் ரோனால்டு ராஸ் மலேரியாக் காய்ச்சலுக்குக் காரணமான கொசுவினைக் கண்டுணர்த்தினான் உலகினுக்கு. அத்தகைய மேன்ஸனைத்தான், 'மஸ்க்டோ மேன்ஸன்' என்று எள்ளி நகையாடினர் மக்கள். பல்வேறு நோய்களுக்குக் காரணம், பார்க்க முடியா பாக்டீரியாஎன்னும் கிருமிகள் தான்என்று கண்டுபிடித்தான் பாஸ்சர் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி. தான் கண்டுபிடித்தவை உண்மையென்று நிரூபிப்பதேபோல் பட்டுப் பூச்சிகளுக்கு வந்த நோயைத் தீர்த்துப் பிரெஞ்சு நாட்டுப் பட்டு வாணிபத்துக்கு வரவிருந்த பெரும் நஷ்டத்தைத் தவிர்த்தான். நாய்கடி நோயை (Hydrophobia) த்தீர்த்தான். கோழிகளுக்கு வரும் வாந்திபேதியை (Chicken cholora) த் தடுக்கும் முறையைக் கண்டு பிடித்தான். இன்னும் பலவற்றைச் செய்தான். சுருக்கமாகக் கூற வேண்டுமானால், பாஸ்சர் துவக்கிய கிருமி நூலின் வளர்ச்சியின் விளைவுதான் 'பெனிஸிலின்' ஆகும். ஏனவேதான் இன்று நாமமைழக்கிறோம் அவனை 'கிருமிநூலின் தந்தை' என்று. ஆனால் அவன் காலத்திலோ என்றால் 'கிருமிப்பித்தன்' என்று மக்கள் அவனைக் கேலி செய்தழைத்த

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

---

ஏன் இந்த நிலை?

கையில் தடி, வெங்நிறத்தாடி; கெம்பீர ஒளியின் பார்வை. அதோ! பார். ஆற்றல் மிக்க அறிவின் சின்னத்தை. அவர் தந்த அருமைக் கருத்தைப் பருகி இன்புறு. இன்றைய சுதந்தரம், பார்ப்பனப் பனியாக்களின் கூட்டுறவொப்பந்தத்தின் ஆட்சி. இதில் கலந்து உன் அறிவை அடகு வைக்கிறாயா? அழகாக ஈந்த கருத்துக்களை மறுபடியும் உன்னிப்பாய்க் கவனி! பிறகு பதில் கூறு!

குடி அரசு

8—5—48 சனிக்கிழமை.

## மாநாட்டின் கருத்தென்ன? பலனென்ன?

★

இன்று தூத்துக்குடியில் திராவிடர் கழக மாநாடு நடைபெறப் போகிறது. தமிழ் நாடெங்கு மிருந்து பலபதினாயிரக்கணக்கான மக்கள் தாய்மார்களோடு, குழந்தை குட்டிகளோடு, பெரியோர்களும், மாணவர்களுமாய் வந்து கூடியிருக்கிறார்கள்.

இது 18வது திராவிடர்கள் மாநாடு என்றாலும், இதற்கு முன் 17 முறை இந்த மாதிரி கூடியிருக்கிறதென்றாலும், இந்த மாநாடு இதுவரையிலும் கூடிய எல்லா மாநாடுகளையும்விட அதிகமான மக்கள் எண்ணிக்கையையும், மக்களுக்குள் அளவு கடந்த ஆர்வத்தையும் கொண்டு கூடியிருக்கும் மாநாடாகும்.

இதற்குக் கருத்தென்ன? இதனால் ஏற்படவேண்டிய பலனென்ன? என்பது தான் விவரிக்கப்படவேண்டியதாகும். தூத்துக்குடிகோயில், குளம், தீர்த்தம், மூர்த்திஆகிய இவைகளில் விசேஷம் பெற்ற ஸ்தலமல்ல. இங்கு நடப்பது ஆட்டம், பாட்டம், சங்கீதம், நாதசுரம், தவுல் வாசிப்பு, டேன்ஸ், வேடிக்கை ஆகியவை கொண்ட ஒரு கொண்டாட்டக்களிப்புமல்ல. வருகிற மக்களோ அழகுப் போட்டிக் காட்சி போல், நகை, துணி மணி, ஆடை அணி ஆகியவைகளின் கண்காட்சிசாலைபோல் காணப்படும் மக்கள் கூட்டத்தைக் கொண்டதுமல்ல. ஒய்வு நேரத்தில் உல்லாசக் களிநடம் புரியலாம் என்று கருதி வரும் மக்கள் கூட்டமுமல்ல. அப்படியிருக்க, தங்கள் வாழ்க்கைக்காரியம் கெட, போக்குவரத்துச்செலவுக்குப் பணமில்லாமல்கடன்வாங்கிக்கொண்டு, ஆர்வத்தோடு அங்கு ஏற்படும் வசதிக்கஷ்டங்களை யெல்லாம் லட்சியம் செய்யாமல், திரண்டுமுதியோர் முதல் சிறுகுழந்தை வரை இவ்வளவு ஆத்திரமாய் வந்து கூடியிருப்பதை, உண்மையாய் அறிவோடு சிந்தித்துப் பார்ப்போமானால் மக்களுக்குச் சுயமரியாதைத்தாகம் ஏற்பட்டதின் பயனாய் வந்து கூடியிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் காரணம் சொல்லுவதற்கு இல்லை என்றே சொல்லுவோம்.

திராவிட நாட்டில் திராவிட மக்கள் பல்கோடிக்கணக்காய், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகஆண்டும், வாழ்ந்தும் வந்திருக்கிறார்கள். என்றாலும், இன்றைய நிலை தான்அவர்கள் தங்களது வாழ்வைப்பற்றிக் கவலையில்லாமல், தாழ்வைப் பற்றிப் பெரியதொரு கவலை கொண்டு, ஒன்று, தங்கள் தாழ்வை ஒழிப்போம்; அல்லது நாம் ஒழிவோம் என்கின்ற உணர்ச்சி நிறைந்த உறுதியோடு வீறு கொண்டு ஓடி வந்திருக்கும் காட்சியாகும்.

உண்மையில் இப்படிப்பட்ட இந்த மாநாடு ஏதாவது ஒரு தொண்டு செய்ததாக ஏற்படவேண்டுமானால், இப்பேர்ப்பட்ட தக்க சமயத்தைக் கைவிட்டுவிடாமல், இன்று மக்களுக்குள்ள ஆர்வத்தையும், ஆத்திரத்தையும்பயன் படுத்திக் கொண்டு முடிவில் இவ்விழிவு ஒழிவதற்கேற்றதான நல்லதொரு வழிகாட்ட வேண்டியது அறிவுடைமையான காரியமாகும்.

திராவிடர் கழகம் தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கமாக இருந்து, பெரியாரவர்கள் கைக்கு வந்து பத்து ஆண்டுகளாகித், திராவிடக் கழகம் என்ற பெயராக மாற்றப்பட்ட, இந்த நான்கு ஆண்டுகளுக்குள் திராவிட மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியடையத்தக்கதும், அதிசயப்படத்தக்கதுமான தன்மான உணர்ச்சியும், அதற்காகப்பாடுபட முந்தும் ஆர்வமும் நல்ல அளவுக்கு ஏற்பட்டிருப்பதை ஒவ்வொரு திராவிடரும் பாராட்டிப் பெருமை கொள்ளத் தக்கதென்றாலும், இனி திராவிடக் கழகக் கொள்கைகள் சீக்கிரத்தில் வெற்றி பெறும்படியான வழியில் மக்களைச் செலுத்திக் கொண்டு போகவேண்டியது, தலைவர் பெரியார் அவர்களுக்கு முக்கியமான காரியமாகும்.

நம் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் ஏற்ற வண்ணம் அதை ஒழிப்பதற்காக நம் எதிரிகளான ஆரியர்கள் கச்சைகட்டிக் கொண்டு தைரியமாக வெளியில் வந்து விட்டார்கள். ஆரியர்கள் ரகசியமாக திரை மறைவில் நம்மாட்களைக் கொண்டே நமக்குக்கேடு செய்து, தங்கள் உயர்வாழ்வை நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்று உறுதியாய் இருந்தவர்கள், இன்றுஅந்த நம்பிக்கையைப் பெரும் அளவுக்கு இழந்து, தங்களையே நம்பி இன்று துணிவோடு வெளிவந்து விட்டார்கள். இவ்வாறு வெளிவந்திருப்பதின் கருத்தும், செயலும் தான் இப்பொழுது சென்ற வாரத்தில் (மே 1. 2 தேதிகளில்) சென்னை ரானடே ஹாலில் கூடிய "பார்ப்பன முன்னேற்ற மாநாடு" என்னும் ஆரியப் பரீக்ஷித்தாகும்.

இந்த மாநாட்டில் பெரும் வீரர்களாக, அனல் கக்கும் வார்த்தைகளை வீசி, துவேஷத்தின் உச்சாணிக்கிளையில் ஏறி நிற்கும் ஒரு மகான் கார்ப்பரேஷன் கவுன்சிலரான சுப்பிரமணிய அய்யருடைய போக்கியதையும், நாணயமும்; மற்றொரு மகான் "அந்தணர் பத்திரிகை நடத்தும் அந்தணர் பெருமானின்" யோக்கியதையும், அவர் நாணயமும் நமக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட ஞானிகளான மகாத்மாக்களைப், பார்ப்பனர்கள் தங்களுடைய பிரதிநிதியாக ஒப்புக்கொண்டு, அவர்கள் அன்று பேசிய பேச்சுக்களை யாரும் மறுத்தோ, கண்டித்தோ இதுவரை பேசாமலிருப்பதிலிருந்து, இவைகளைத் தனிப்பட்டவர்கள் கருத்தென்று கொள்ளாமல், பார்ப்பன சமூகத்தின் கருத்தென்றே எவரும் எடுத்துக்கொள்ளவேண்டும். இவைகளை வெளியிட்டதற்காக முதலில் திராவிடர்கள் சார்பாக நம் பாராட்டுதலையும், சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏன்? இதுவரை மாவிலும் ஒட்டாமல் பணியாரத்திலும் ஒட்டாமல், எட்டினால் குடுமியைப் பிடிப்பதும் எட்டாத போனால் காலைப் பிடிப்பதுமாக இருந்த போக்கை மாற்றிக் கொண்டு, வெளிப்படையாக மனதிலிருப்பு

தைச் சொல்லியதற்காக யார்தான் பாராட்டாமல் இருக்க முடியும்? "முதலில் சுதந்தரம் வந்தால், அதற்குப் பாடுபட்டால் பைய, ப்பைய இந்த ஜாதி பேதங்கள் எல்லாம் தானாகவே மறைந்துபோய் விடும்; இதைப் பெரிசுபடுத்தக் கூடாது'' என்ற பல்லவியை அன்றைக்குப் பல விபீஷணர்கள் தாளம்போட, முன்னணியில் நின்று பாடிவந்த பார்ப்பனர்கள், இன்றைக்கு வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள்.

எப்படி? ஜாதிமத உயர்வு ஆண்டவன் படைப்பு! அதைச் சமப்படுத்த எண்ணுவது வீண் கனவு! நாங்கள் இருக்கும்போது இந்த நாச வேலையை நடக்க விடமாட்டோம்! புல்லேந்தினோம் முன்பு! பேனா ஏந்தினோம் பின்பு! இன்று துப்பாக்கி ஏந்தத் தயார்! இந்த நாட்டின் யூதர்களாகவேண்டுமா? என்கிறார்கள். இவர்களின் வீரத்தில் ஏதோ குற்றம் இருக்கிறதென்று எண்ணிக் கொண்டு, நாங்கள் அன்றும் இன்றும் வீரர்கள் பரம்பரை தான் என்றும் முழக்கியிருக்கின்றார்கள்.

அவர்கள் வீரப்பிரதாபத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன சந்தேகமோ? "சாதுத் தன்மைதான் பார்ப்பனனுக்கு, சண்டை போடும் தன்மைதான் திராவிடனுக்கு; சண்டை போடும் பார்ப்பானோ, சவண்டித்தனமான திராவிடனோ காணப்பட்டால், அது அவன் பிறப்பில் ஏற்பட்ட கோளாறு'' என்று சிலர் சொல்லுவதற்கு இதுபதில் சொல்வதாக இருந்தாலும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர்கள் வீரத்தைப் பற்றியோ, தந்திரம் வஞ்சகம் போன்ற மற்றவைகளைப் பற்றியோ நாம் குறைவாக மதிப்புப் போடவில்லை என்று உறுதி கூறுகிறோம்.

நூற்றுக்கு மூன்றுபேராயிருக்கும் பார்ப்பனர்கள், அவர்கள் சொற்படி புல்லை ஏந்துவதை விட்டு விட்டு வாளைத் தூக்குவார்களேயானால், அதன் விளைவாக ஒரு பார்ப்பனன் ஒரு திராவிடனைக் கொல்லுவானேயானால், அதனால் திராவிடனுக்கு ஏற்பட்டு விடப்போகும் நஷ்டம் என்ன? இன்றைக்கு 97 பேராக இருக்கும் திராவிடன், குறைந்தது 94 பேராக இருக்க முடியுமே தவிர, 3 பேராக இருக்கும் பார்ப்பனன் 0 இருக்க முடியுமே தவிர, வேறு என்ன அதிகமாக ஏற்பட்டுவிட முடியும் என்று கேட்கிறோம்?

ஆகவே இந்தப் பார்ப்பன மகான்களுடைய சலசலப்புக்குத் திராவிடர்கள் யாரும் அஞ்சவோ, கலங்கவோ, பின்வாங்கவோ மாட்டார்கள் என்றும், அதே நேரத்தில் பார்ப்பானைக் கண்ட கண்ட இடத்திலே நசுக்குவது என்கிற போக்கைத் திராவிடர்கள் கையாண்டுவிட மாட்டார்கள் என்றும் அந்த மகான்களின் சமூகத்துக்கு நாம் இப்போதும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நிற்க, இன்று கூடுகிற இந்தத் தூத்துக்குடி மாநாடு யாரையும் ஒழித்துக் கட்டிவிடுவதற்கோ, அல்லது யார் மீதும் துவேஷத்தை உண்டாக்குவதற்கோ அல்ல. எப்பாடுபட்டாவது எந்தத் தியாகத்தைச் செய்தாவது இழிவு நீக்கு வேலையைச் செய்ய, துடிதுடித்துக்கொண்டிருக்கும் தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் நாம் ஞாபகப்படுத்துவது இதுதான்.

நம்முடைய இழிவு நீக்குப் போராட்டம் வெற்றிபெறவேண்டுமானால், நமக்கு முதலில் ஒரு சிறந்த தலைவர் வேண்டும். அந்தத் தலைவர் போர்த் திறமும், புது நிலைக்கான சூழ்ச்சித் திறமும், எழுச்சி தரும் தோற்றமும், எதற்கும் அஞ்சாத நெஞ்சமும், அடக்கியாளும் தகுதியும், அடங்காத லட்சிய வேட்கையும் உடையவராயிருக்க வேண்டும். மேலும் போராடும் எதிரியின் முழுப்பலத்தையும், அவர்களின் சாகஸத்தையுமுணர்ந்த அநுபவஸ்தராயுமிருக்க வேண்டும். பட்டத்திற்கோ, பதவிக்கோ, பொருளுக்கோ, புகழுக்கோ தலை சாய்த்துவிடாத தறுக்கண்ணராயுமிருக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட உயர்ந்த குணங்களைப் பெற்றிருக்கும் பெரியாரவர்களை, அழுகிப்போன சமுதாயத்திலிருந்து நாம் அதிர்ஷ்ட வசமாகப் பெற்றிருக்கிறோம்.

ஆனால் சிறந்த தலைவர் மட்டும் இருந்தால் போதுமா? தலைவருடைய ஆணைக்கு அடங்கும், கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படியும் வீரர்களாக நாம் இருக்கிறோமா என்பதைத் தான் இந்த நேரத்தில் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஆர்வமும், எழுச்சியும் உண்மையிலேயே பெரும் பயனைத் தர வேண்டுமானால், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போக்க முடியாத நம் இழிவு துடைக்கப்படவேண்டுமானால், தலைவரின் ஆணைக்கு அடங்கும் கட்டுப்பாடு தான் நமக்கு முதலில் வேண்டும். அந்தக் கட்டுப்பாட்டைக் கொள்ளாமல், பார்ப்பானைப் பார்த்தும், முஸ்லிமைப் பார்த்தும் அந்தப் படிப்பினையைப் படித்துக் கொள்ளாமல், தனித் தனிப் போக்குடையவர்களாகவே இனியும் நாம் இருப்போமானால், நாம் என்றைக்குமே மீளமுடியாத துன்பத்திற்கும், தொல்லைக்கும், ஆபத்துக்கும், அக்கிரமக் கொடுமைகளுக்குமே ஆளாகி என்றும் நீங்காத இழிவையும், பழியையும் உடையவர்களாகவே இருப்போம். இதையுணர்ந்து கட்டுப்பாட்டிற் கடங்கி, எடுத்துக்கொண்ட லட்சிய வாழ்வு எளிதாகச் சித்தியடைய எல்லோரும் சபதம் எடுத்துக்கொள்ளும் நாள், இந்த நாளாகும் என்று சொல்லி இதை முடிக்கின்றோம்.

## நடக்கவிருப்பவை.

16—5—48 ம் நாள் ஞாயிறு மாலை 5-மணிக்கு கோபி டவுன் திராவிட வாலிபர் கழக முதலாவது ஆண்டு விழா தோழர் க. அன்பழகன் அவர்கள் எம். ஏ. தலைமையில் நடைபெறும். தோழர்களான இளஞ்செழியன், எஸ். பி. மீனாட்சி அம்மாள், சி. பி. சின்னராசு, ஆ. வ. ப. ஆசைத்தம்பி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## தோழர்கள் மங்கையர்க்கரசி— சோமசுந்தரம்

### பதிவுத் திருமணம்.

21—4—48ம் தேதி புதன்கிழமை காலை 9 மணிக்குக் கும்பகோணம் டயமண்ட் டாக்கீஸில் கரூர் தோழர் பி. பெருமாள் அவர்கள் குமாரர் தோழர் பி. சோமசுந்தரம் அவர்களும், கும்பகோணம் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் குமாரத்தி தோழர் மங்கையர்க்கரசி அவர்களும் தங்களது வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்தை ஜில்லா ரிஜிஸ்ட்ரார் அவர்கள் முன்னிலையில் பதிவு செய்து கொண்டனர்.

ஷை வாழ்க்கைத்துணை ஒப்பந்த விழாவிற்கு ஆயிரக்கணக்கான திராவிடத் தோழர்கள் வந்து

பெரியதொரு மாநாடு போல் சிறப்பித்தனர்.

திருமணத்தைப் பாராட்டித் தலைவர் பெரியார் ராமசாமி, தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். எஸ். கிருஷ்ணன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். ராமசாமி முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

ஏராளமான வாழ்த்துப் பத்திரங்களும், வாழ்த்துச் செய்திகளும், தந்திகளும் வந்திருந்தன.

22—4—48 தேதி மாலை 7-மணிக்கு மேல் கரூரில் மணமகன் இல்லத்தில் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. உள்ளூர் பிரமுகர்கள் பலரும், இயக்கத் தோழர்களும், தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. ஆர். ராமசாமி, சம்பத் முதலானவர்களும் வந்திருந்தனர். ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு மணமக்களை வரவேற்றும், பாராட்டியும் தோழர்கள் வி. சி. குழந்தைசாமி, பி. ஷண்முகவேலாயுதம் ஆகியவர்கள் பேசினார்கள்.

மணமகன் தோழர் பி. சோமசுந்தரம் நன்றி கூறினார்.

## நன்றி.

21—4—48ந் தேதி கும்பகோணம் டைமண்ட் டாக்கீஸில் நடந்த எங்களது திருமணத்தைப் பாராட்டி வாழ்த்துகள் வழங்கிய நண்பர்கட்கு, எங்களது உளங்கனிந்த நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெ. சோமசுந்தரம்.
சோ. மங்கையர்க்கரசி.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

னர். எனவே உண்மையை எடுத்துரைக்கும் எவனுக்கும், முதலிலே கிடைப்பது உலகின் தூற்றுதல் தான். பிறகு தான் போற்றுதல். அதைப் பற்றி அறிஞன் கவலைப்படப் போவதில்லை.

நிற்க, சென்றனர் லேஸியர், கேரால், ரீட் என்னும் மூவரும் குயூபா பிரதேசத்திற்கு மஞ்சள் சுரத்தின் மாயத்தையறிய. செல்லும் இடமோ இதற்கு முன் செல்லாத இடம்; இறப்பெனும் அரக்கன் மஞ்சள் சுரமெனும் கொடுங்கோல் கொண்டு ஆட்சிபுரியும் இடம். அங்கு சென்றால் எந்நொடியிலும் இறப்பு நேரும். அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையேயில்லை. அவர்களின் நெஞ்சுரம் போர் வீரனின் நெஞ்சுரத்தைக் காட்டிலும் உரமானது. மக்களினத்தின் மீதுள்ள அன்பு அத்தகைய அபாயத்தை மேற்கொள்ளச் செய்தது அவர்களை.

நோய்க்குக் காரணம் யாதென யாருக்கும் தெரியாது. கொசுவாக இருக்குமா? வேறு பூச்சிகளா? தட்பவெப்ப நிலையா? ஒன்றும் தெரியாது.

கொசு குற்றவாளியா, அல்லவா என்று தெரிந்து கொள்ள வேண்டும். எப்படி?

ஒருநாள் லெவஸியர் நோயாளிகளின் குருதியைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தான். அப்போது ஒரு கொசு அவன் தலையைச் சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்தது. "கொசுதான் காரணமா என்று கண்டறிய வேண்டும். இதோ என் தலை மீதே ரீங்காரமிடுகிறது ஒரு கொசு. என்னையே கடிக்க வைத்துக் கொண்டால் காரணத்தைக் கண்டறியலாம்" என்றெண்ணினான் லெவஸியர். ஒரு வேளை கொசுதான் கரணமாகவிருந்தால்தான் சாவது, இரண்டும் இரண்டும் நான்கென்பது எவ்வளவு உண்மையோ அதைவிட உண்மையானது. தான்சாவதைப் பற்றி அஞ்சினானில்லை லெவஸியர். ரீங்காரமிடும் கொசு தன்கை மீதமர ஆடாதசங்காதிருந்தான்! கொசுவும் அவன்மீது உட்கார்ந்து கடித்தது. கொசு உட்கார்ந்து கடித்ததைக் கூர்ந்து கவனித்து அதை அப்படியே எழுதினான்!

ஐந்து நாட்களில் மஞ்சள் சுரம் பற்றியதவனை. காய்ச்சலின் கடுமையைத் தாங்காது துயருற்றான். எல்லோரையும் போலவே தான் மருத்துவ வீரன் லெவஸியரையும் மாய்த்தது மஞ்சள் சுரம். ஆயினும், 'மஞ்சள் சுரத்தின் காரணத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டிவிட்டோம்' என்ற உவகையோடுதான் அவன் இறந்திருப்பான்.

லெவஸியர் வேண்டுமென்றே போய் இறப்பைத் தழுவினான். அவன் இறந்தான். ஏன்? நாம் வாழுவதற்காக. மஞ்சள் காய்ச்சல் ஒருவிதக் கொசுக்களால்தான் பரவுகிறது என்ற உண்மையைத் தன்னுயிரீந்து உலகிற்குணர்த்தினான் லெவஸியர். லெவஸியர் பட்டதுன்பம், விட்ட உயிர், மஞ்சள் சுரமெனும் பெருநெருப்பையணைத்தது. நாகரீகத்தைநசுக்கிவந்த, மக்களை மாய்த்து வந்த மஞ்சள் சுரத்தை மாய்த்தது. எப்படியோவெனின் மஞ்சள் சுரம் பரவுதற்கு மக்களும், ஸ்டேகோமியாவெனும் ஒருவிதக் கொசுக்களும் வேண்டும். இரண்டில் ஒன்றில்லையேல் மஞ்சள் காய்ச்சலுமில்லையல்லவா? எனவே கொசுக்களை யொழித்துக்கட்டினால் மஞ்சள் காய்ச்சலும் ஒழிக்கப்பட்டதாகும்.

நிற்க, மஞ்சள் காய்ச்சலுக்குக் கொசுவொன்றுதான் காரணமா, பல்வேறு காரணங்களுளவா என்பதையாராய டாக்டர் குக்கும் மற்றும் இருவரும்செய்த தியாகம், செங்குட்டுவனுக்காக இளங்கோ செய்த தியாகத்தைவிட, ஹிமாயூனுக்காகப் பாபர் செய்த தியாகத்தைவிட, சேய்க்காகத் தன் தாய் செய்யும் தியாகத்தைவிட, அளவிலும் தன்மையிலும் பன்மடங்கு பெரியது.

Dr. குக்கும், மற்றுமிருவரும் கொசுக்கள் புகாதமுறையிலே ஒரு குடிசையைக் கட்டினர். அக்கொசுபுகாக்குடிசையினுள் மஞ்சள் காய்ச்சலால் கல்லறைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் அழுக்குத்துணிகளையும், போர்வைகளையும் வைத்து விட்டுத் தினந்தோறும் சாயுங்காலமானதும் மேற்சொன்ன மூவரும் உள்ளேபோவார்கள். அழுக்குப் போர்வைகளைப் போர்த்திக் கொண்டு நாற்றத்தைச் சகித்துக் கொண்டு காலைவரை அங்கு உறங்குவார்கள். பிறகு மறுநாளும் அவ்வாறே உறங்குவார்கள். அவ்வாறு 21 இரவுகள் மஞ்சள் காய்ச்சலால் மாண்டமாந்தர்களின் போர்வைகளைப் போர்த்திக்கொண்டு, துணிகளைக் கட்டிக்கொண்டு உறங்கினார்கள். நினைக்கினும் மயிர்சிலிர்க்கிறது. அன்பால் கண்கள் நீரைச் சொரிகின்றன. அத்தகைய செயலை எதற்கு ஒப்பிடுவது. காந்தியாரின் 1943ம் வருடத்திய 21 நாட்கள் பட்டினிக்கு ஒப்பிடலாமா? சே! அதைவிட மடமை எதுவுமே இருக்காது. காந்தியார் பட்டினியிருந்ததே பொருளிலாக் காரணத்திற்காக. அப்பட்டினியால் பொதுவாக மக்களுக்கோ, சிறப்பாக இந்தியருக்கோ ஒரு நன்மையும் ஏற்படவில்லை.

நிற்க 21நாட்கள் டாக்டர்குக்கும் மற்ற இருவரும் கொசுபுகாக் குடிசையினுள் போய் மஞ்சள்சுரத்தில்

மாண்ட மக்களின் உடைகளை யுடுத்திக் கொண்டும், போர்வைகளைப் போர்த்திக் கொண்டும் உறங்கினார்களே. எதற்காக? மஞ்சள் காய்ச்சல் கொசுக்களால் மட்டுந்தான் பரவுகிறதா, பெரியம்மை, டைபாய்டு என்ற நோய்களைப் போன்று தொற்றும் தன்மையதாஎன்று கண்டறிவதற்காக. இருபத்தொரு நாட்கள் அவ்வாறு அவர்கள் உறங்கியும் அவர்களில் யாரையும் மஞ்சள் காய்ச்சல் பற்றவேயில்லை.

எனவே மஞ்சள் காய்ச்சல் கொசுக்களால் தான் பரவுகிறது? தொற்றுநோயல்ல என்பது முடிவு கட்டப்பட்டது.

மஞ்சள் காய்ச்சலுக்குக்காரணம் ஒரு விதக்கிருமிகள். அக்கிருமிகள் தாங்களாகவே ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் மூச்சு விடுவதாலோ, கழிவுப்பொருள்களாலோ போய்ச் சேருவதில்லை. அப்படி ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனிடம் போய்ச் சேரவேண்டுமென்றால் ஒருவனது ரத்தத்திலுள்ள கிருமிகள் மற்றொருவனின் ரத்தத்தைப் போயடைய வேண்டும். அந்த வேலையைத் தான் கொசுக்கள் (இங்கே 'ஸ்டெகோமியா' கொசுக்கள்) செய்கின்றன. நோயாளிகளுடைய இரத்தத்தை ஸ்டெகோமியா கொசுக்கள் குடிக்கும்பொழுது, மேற்சொன்ன கிருமிகள் கொசுக்களின் தொண்டைகளை யடைகின்றன. அங்கேயே சில நாட்கள் வரை வளர்கின்றன. பிறகு அக்கொசுக்கள் நோயற்றவரின் குருதியை உறிஞ்சும் பொழுது அவர்களின் இரத்தத்தில் இக்கிருமிகள் விழுந்து அவர்களுக்கும் நோயை (மஞ்சள் சுரத்தை) உண்டாக்குகின்றன. இவ்வாறு மஞ்சள் காய்ச்சல் பரவுவதற்கு ஸ்டெகோமியா கொசுக்கள் காரணமாக இருக்கின்றன. கொசுக்களில்லையேல் நோயும் பரவாது.

எனவே கொசுக்கள் வளர்வதற்கேற்ற இடங்களான, நீர் நிலைகள், குட்டைகள், சாக்கடைகள், முதலான இடங்களில் கொசுக்களைக்கொல்லும் ஒருவிதஎண்ணெ யூற்றும் பழக்கத்தைக் கையாண்டான் வில்லியம் கிராபோர்டு ரோஜர்ஸ் என்பவன். சாக்கடைக் கால்வாய்களைச் சுகாதார முறையில் மாற்றியமைத்தான். கொசுவலைகளை ஒவ்வொருவரும்பயன்படுத்துமாறு கட்டளையிட்டான்.

கொசுக்கள் ஒழிக்கப்படவே மஞ்சள் காய்ச்சலால் மாயும் மாந்தர்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறையவாரம்பித்தது பனாமா பிரதேசத்தில். லெஸியர் தன் உயிரைக்கொடுத்து மஞ்சள் சுரத்தின் மூலகாரணத்தைக் கண்டு பிடிக்கவே அதனை யொழிப்பது எளிதாயிற்று. தன்னலமற்ற, நெஞ்சுரமிக்க விஞ்ஞானிகளின் ஆறுமாதகால ஆராய்ச்சியின் பயனாக, லெஸியர் தன் உயிரைக் கொடுத்ததின் பயனாக, டாக்டர் குக்கும் மற்றுமிருவரும் துர்நாற்றத்தைச்சகித்துக்கொண்டு, நோயாளிகளின் போர்வைகளைப் போர்த்துக் கொண்டும் அவர்களது உடைகளையுடுத்திக் கொண்டும் உறங்கினதின் பயனாக, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்களை மாய்த்துவந்த, நாகரீகம் பரவாது தடுத்துவந்த நோய் தடுக்கப்படுவதாயிற்று. மக்கள் பெருமூச்சு விட்டனர் இனிப் பிழைத்தோமென்று.

மஞ்சள் சுரம் தடுக்கப்படவே, பனாமா கால்வாயை வெட்டுவது எளிதாயிற்று. வெட்டி முடித்தனர் அமெரிக்கர். மாடமாளிகைகள் நிற்கின்றன இன்று பனாமா பிரதேசத்தில்.

---

## ரொட்டித் தொழிலாளி அவதி.

[எம். செல்லத்துரை]

தேசீயத் தோழர்கள் சொல்லும் சுதந்தர இந்தியாவின் ஒருபகுதியாகிய தூத்துக்குடியில், ரொட்டி, பிஸ்கட் வேலை செய்பவர்கள் சுமார் 150 பேர் இருக்கிறார்கள். இவர்கள் 2, 3 மாத காலமாகப்படுகிற கஷ்டங்களை ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு தூரம் எடுத்துச்சொல்லியும், செவிடன்காதில் சங்கு ஊதியதுபோல் இருக்கிறது. ரொட்டிக்கடைக் காரரிடம் தொழிலாளிகள் போய் நின்று கண்ணைக்கசக்குகிறார்கள். கடைக்காரர்கள் என்ன செய்வார்கள்? தொழிலாளிக்கு வேலை கொடுக்கலாமென்றால், கடைக்காரர்களே கடையைப் பூட்டும் நிலைமை வந்து விட்டதே என்று சொல்லுகிறார்கள். கடைக்காரர்கள் ரேஷனிங் ஆபீஸரிடம்போய், கடையிலுள்ள தொழிலாளிகளும் நாங்களும் ரொம்பக்கஷ்டப்படுகிறோம் என்று வாதாடினார்கள். ஆட்சியாளர்களின் ஆர்டரை (மதராஸ் போர்டு ஆர்டரை) காண்பித்து 12 ல் 1 பாகம்தான் கோதுமை மாவு கொடுக்கும் படியாக இருக்கிறது; என்னை ஒன்றும் கேட்காதீர்கள் என்று ரேஷனிங் ஆபீசர் சொல்லுகிறார். ஒரு நாளைக்கு 50 ராத்தல் முதல் 100 ராத்தல் வரை ரொட்டி பிஸ்கட் செய்யவேண்டிய கடைக்கு 5 ராத்தல் 10 ராத்தல் கோதுமை மாவுதான் கொடுக்கிறார்கள். இந்தக் கோதுமை மாவைக்கொண்டு தொழிலாளிக்கு எப்படி வேலை கொடுக்க முடியும் என்று சொல்லித் தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். ஆனால் கோதுமையோ வேண்டிய மட்டும் ஸ்டாக் இருக்கிறது. இப்போது சப்ளை செய்யாமல் 1 மாதத்திற்கு இருக்குமானால் கோதுமை மாவை ரொட்டி செய்து உணவாக உட்கொள்ள முடியாது. இப்போதே வண்டுகள் அரிக்கிறது, இன்னும் ரொம்ப மோசமாகிவிடும். மதுரையில் ரொட்டிரேஷன் இல்லை. ஆதலால் அங்கு இப்போது ரேஷனுக்குக் கொடுத்த ரேட்டைவிட சவுகரியமாக மைதா மாவு வாங்கி ரொட்டி செய்து பொதுஜனங்களுக்குக் குறைந்த விலைக்குச் சப்ளை செய்கிறார்கள். இங்கு ஆட்சியாளர்கள் ரொட்டி ரேஷன் தேவை இல்லாது இருக்கிறதென்றால் கவனிப்பார்களா?

ரொட்டிக்கடைத் தொழிலாளி ஒருவர், அதுவும் பொதுஜனங்கள் மதிப்புப் பெற்றவர், கடைக்காரர்களிடம் சர்டிபிகேட் வாங்கினவர், வேறு வேலை தெரியாததினால் பிச்சை எடுக்கிறார். இன்னும் சிலர் கடைக்காரர்களிடம் நீங்கள் எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும் போதும் என்கிறார்கள். சிலர் வேலையையும் இழந்தார்கள்.

கோதுமை உழுத்துப் போவதற்கு முன்னால் தொழிலாளியின் கண்ணீருக்கும் பொதுஜனங்களின் நன்மைக்கும் உணவாக ரொட்டி தயாரித்து விநியோகிக்கும்படி ஆட்சியாளர்கள் இருக்கிற கோதுமை, மைதா மாவு இவைகளை விநியோகம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் ரொட்டி ரேஷனை எடுத்து விடவேண்டும். இந்த இரண்டிலொன்றைச் செய்தால் தான் தொழிலாளிகள் கஷ்டம் நீங்கும். பொதுஜனங்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் சவுகரியமாக இருக்கும். ஆகையினால் ஆட்சியாளர்கள் இதைஉடனடியாகக் கவனிப்பார்களா?

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு இதுவரையில் நாட்டில் சிதறிக் கிடந்த பொதுமக்கள் சக்தியை ஒன்று திரட்டிப் போராட்டத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தோம்.

பெரியார் தலைமையின் கீழ் திராவிடநாட்டுப் பிரிவினைக்காகப் போராட—கிளர்ச்சி செய்யப் பெரியதொரு படை திராவிடத்தில் தோன்றி விட்டது. பெரியார் தலைமையிலேயே திராவிடத் தனியரசை பெற்றுத் தீரு

# எல்லோரும் வாருங்கள்!

"சி. ச. சங்கரலிங்கம்"

ஜாதியில் பறையன் நந்தன். ஆம், அவன் கீழ் ஜாதி. நாலாம் ஜாதி. படைத்தல் தொழில் பிரம்மாவின் காலில் தோன்றியவன். இவன் ஆசை, 'சிவலோக நாதனைக் கண்டு சேவிக்க, சிதம்பரம் போக! நான்முகன் முகத்தில் தோன்றிய பார்ப்பான்', சிதம்பர தெரிசனமா, இதைநீ சிந்திக்கலாமோ, பறையா? என்று கடிகின்றான் சிறுத்தைபோல். சாதி தொலைய நந்தன் தீக்குளிக்கின்றான். முக்தி கோரி பக்தியால் தன் சக்தி இழந்த நந்தன் படும்பாடு சொல்லொணாத் துக்கம்— இது நம் நாட்டில், புராண ஏட்டில். சரித வரலாற்றிலல்ல. உண்மையோ வெனில் வெறும் புனைந்துரை. எல்லாம் கட்டுக்கதை. மக்கள் மதியை மாய்க்க இடைக்காலத்தில் செய்த சதியின் விளைவு.

எந்தக் குலம் நம் நாட்டில் நாலாம் சாதி, கீழ் சாதி என்று தூற்றப்படுகின்றதோ அதே சாதியில் பிறந்தவன் தான்ரஷ்யாவின் தலைவன்ஸ்டாலின். சக்கிலிய வகுப்பு. ஆனால், நம் நாட்டிலுள்ள தீட்டு, 'எட்டி நில்' என்ற கொடுஞ்சொல் இல்லை அங்கு. உழைப்புக்கு நம் நாட்டில் இடமில்லை. நம் நாட்டில் மக்கள் பணத்தைக் கண்டு பல்லிளிப்பர், ஏழ்மையைக் கண்டு எள்ளி நகைப்பர். உழைக்காமல் உண்டு,உடுத்தி. சுகபோகங்களில் திளைத்து, மாடமாளிகை, கூட கோபுரங்களிலும், பஞ்சணை, அம்சதூளிகா மஞ்சத்தில் உறங்கி, தாதியர் சூழ, வேதியர் மகிழ, சேடியருடன் உல்லாச வாழ்வு வாழும் சல்லாச சீமான், சீமாட்டிகளை மக்கள் போற்றுவர். முன் ஜென்ம பூஜாபலன்—இவ்வாழ்வின் சுகபோகம் என்ற வியாக்கியானத்துடன். ஆனால், ஏழைச் சக்கிலியன் மகனே ஜோசப் ஸ்டாலின். நாலரை ரூபாய் வீட்டு வாடகை கொடுக்க முடியாத அவ்வளவு ஏழ்மை. சிறு வயதிலே நம் நாட்டில் புராண எட்டிலுள்ள நந்தன்போல், 'காயமே இது பொய்யடா எனவே எல்லோரும் வாருங்கள் சிவலோக நாதனைக்கண்டு சேவிப்போம்'-என்ற 'சீரிய!?' கொள்கை அவனுக்கில்லை. பின்? உழைத்தான்-உழைத்தான் நாட்டின் நலனுக்கு வளனுக்கு. வறுமைக்கு அஞ்சவில்லை. சிறுமைக்குப் பணியவில்லை. உழைப்பின பயனாய் இன்றைய உன்னத நிலைமைக்கு வந்தான். இப்போதும் அவன் இருக்கும் இடமோ ஜார் அரசனின் வேலைக்காரன் குடியிருந்த நாலே அறை கொண்ட சின்னஞ் சிறு சிங்கார வீட்டில். இவன் வாங்கும். சம்பளமோ வெனில் ரூ 150 தான்!! (நம் நாட்டின் நலனுக் கென்றே உழைக்கும் நம் மந்திரி தந்திரிகளின் சம்பளம் போல் அல்லவே அல்ல!) இப்பேர்ப்பட்ட உழைப்புக்கு உண்டு பலன் அங்கு. இப்பேர்ப்பட்ட எழிலுடைய தலைவனை மக்கள் அங்கு ஏற்றிப் போற்றுகின்றனர். பூஞ்சோலை, சோலை, சாலைகளுக்கு அவன் பெயரே. அய்ந்து பெரிய நகரங்களுக்கு அவனது திரு நாமமே. "மதம் ஒரு அபின்" ஸ்டாலின் எண்ணம். இக்கொள்கையையுடைய ஸ்டாலினை மக்கள் நாத்தீகன் எனக் கடியவில்லை, விரட்டவில்லை. பின் புகழ்ந்தனர்-புகழ்கின்றனர். அவனுக்கு நாடுதோறும் கோவில் கட்டும் திருப்பணியை அவர்கள் ஏற்கவில்லை. பின்! தம் இன்ப ஹிருதயக் கோவிலில் அவனைக் குடியேறச் செய்து, தம் மடமையைப் போக்கித் தம்தேயக் கடமையைச் செய்கின்றனர்.

அதேபோது! நம் நாட்டில்........ ஏழை கோழையாகிறான். பாட்டாளி ஏமாளியாகிறான் விதியால், கர்ம வினையின் பெயரால், தலை எழுத்தால், 'இதுமாய வாழ்வு. நாடக மேடை'—என்ற விபரீதப் பேச்சால். காரணம்! திராவிட மக்கள் இடைக்காலத்தில் தரப்பட்ட ஆரிய மதுவால் மதிகலங்கி, கதிகலங்கி கருத்துக்கருகி நிற்கின்றனர். ஆரியம் ஆட்டி வைக்கின்றது ஓர்புறம். விதியின் சதி மறுபுறம். புராண இதிகாசங்களின் மோகம் மற்றோர்புறம். இவைகளுக்கு மத்தியில் திராவிடன்! எங்கிருந்தோ ஓர் உண்மைக் குரல் போதையால் உறங்கும் திராவிடனை எழுப்புவது போல், இன்னுமா தூக்கம்? மடமையை உதறித் தள்ளி கடமையைச் செய். நாட்டுக்கு நன்மை செய்என்று. எங்கிருந்து! ஈரோட்டிலிருந்து. யாரிவர்?! எட்டுமுறை சிறை சென்ற தீரன். தமிழனின் தீரத்தைப்பாடி, ஆச்சாரியார் ஆட்சியைச் சாடி, அறுபதாம் ஆண்டிலே வெஞ்சிறை சென்ற வீரன் ஈ. வே. ரா. அவரது வீரஉரை 'காற்றினிலே வரும் கீதம் நமக்கு. முன் நாள், இந்தக் கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப்போக'—என்று கடிந்த அருட்பா இயற்றிய இராமலிங்கனார் போல், பார்ப்பனீயத்தை எதிர்த்த கபிலர், சிவவாக்கியர், வள்ளுவர்போல், ரஷ்யாவின் தலைவன் ஸ்டாலின் போல்.

மதத்தின் மண்டையிலடித் தான் ஸ்டாலின். வெற்றியுங் கண்டான். புகழும் பேரும் அவனுக்கு. ஆனால், ஆரிய ஆணவ போதையால் மதிமயங்கும் ஆரிய அடிவருடிகளுக்கு பெரியாரது கொள்கை வேம்பு. ஆனால் நமக்கு தேன், தென்றல். நம்மை முற்றுகையிடும் வைதீகக், ஆரியக் கோட்டைகளின் சனாதன அகழியைக் கடந்து, கோட்டையை பகுத்தறிவு ஆயுதத்தால் சுக்கு நூறாக்கி உட்புகுந்தால் அதோ தெரிகின்றது வளமார் இன்பத்திராவிடம், சாதி, சமயக் கோட்பாடின்றி. 'எல்லோரும் வாருங்கள்' என்று கூப்பிடுகின்றார் திராவிடர் தந்தை. பின்பற்றுவோம் அவர் தம் கொள்கைகளை.

---

வோம் என்ற மக்களின் இதய ஒலி எங்கெங்கும் கேட்கிறது.

1948 மேதினத்தன்றும் அதற்கு மறுநாளும் தூத்துக்குடியில் நடக்கவிருந்த திராவிடர் கழக மாகாணமாநாடு மே 8, 9 தேதிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மாநாடு திராவிடர் கழகச் சரித்திரத்திலும், திராவிட நாட்டு வரலாற்றிலும் முக்கியமான கட்டத்தை அடையப்போகிறது. இந்த ஆண்டுமேமாதம்நமதுபோராட்டத்தின் ஆரம்ப மாதம். திராவிடத்தின் விடுதலைக் கதிரவன் உதயமாகும் புனித மாதம். இந்த ஆண்டு மேதினம் ஆரியம் அழியப்போகிறது என்பதற்கு ஓர் அறிவிப்பு. "பெரியார் தலைமையின் கீழ் திராவிடநாட்டுப் பிரிவினைக்காக ஒன்று திரண்டு போராடி, திராவிடத் தனியரசைப் பெறுவோம். வாழ்ந்தால் விடுதலை பெற்ற திராவிடத்தில் வாழ்வோம் அல்லது வீழ்வோம்" என்று இந்த ஆண்டு மேதினத்தில் நாம் உறுதி கொள்வோம்.

1948 மே மாதம் 1, 2, தேதிகளில், மரணத்தைத் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருக்கும் ஆரியம் "சென்னை மாகாண பார்ப்பனர் முன்னேற்ற மாநாடு" கூட்டினார்கள் சென்னையில். ஆரிய முன்னேற்றம் என்றால் திராவிடர்களை நசுக்குவது-அழிப்பது என்று தானே பொருள்? ஆம், செய்யட்டும்! நம் மாநாட்டிற்கு முன்பு குறிப்பிட்டிருந்த தேதிப்படி (மேமாதம் 1, 2) பார்த்தால் ஒரே குறிப்பிட்ட இரண்டு தினத்தில் ஒருபுறம் ஆரியமும், மற்றொருபுறம் திராவிடர்களும் போர் முகாம் அமைத்து விட்டார்கள் என்ற நிலைமையில்தான் இருந்தது. ஆனால் நமது மகாநாடு 8, 9, தேதிகளுக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. இது ஆரியத்திற்கு நாம் கொடுத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம்.

இச்சந்தர்ப்பத்தை அவர்கள் எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். அவர்களின் உண்மை ரூபத்தை நம் அண்ணாத்தைகள் கண்டுகொள்ள வேண்டும்.

---

## ஏஜண்டு தோழர்களுக்கு.

சென்ற மாதப் பாக்கியை 12—5—48 தேதிக்குள் அனுப்பாத ஏஜண்டுகளுக்குக் கண்டிப்பாய்ப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர் "குடி அரசு"

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கள், இராட்சதர்கள் என்றும் கூறி வந்திருக்கிறது.

## யாகத்தை எதிர்க்கும் நாம் அரக்கர்களாம் சூத்திரர்களாம்.

நம்மவர் தென்னாட்டில் பெரும் பகுதியாகவும், வடநாட்டில் ஆரியர் பெரும் பகுதியாகவும் இருப்பது வடநாட்டிலிருந்த திராவிடர்கள்ஆரியஎதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் தென்னாட்டை நோக்கி வந்து இருக்கவேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது. ஆரியர்களின் முக்கிய சடங்காகிய யாகத்தை எவன் பழித்தானோ, கெடுத்தானோ அவனே ஆரியர்களால் அரக்கனென்றும் இராக்ஷதனென்றும் கூறப்பட்டான். ஆகவே யாகத்தில் உயிர்ப்பலி கூடாது, அத்தியாவஸ்யமான பொருள்கள் நெருப்பில் போட்டு எரிக்கப்படக் கூடாது என்று கூறும் நம்மைத்தான், அரக்கர் என்கின்றனர் இந்த அன்னக் காவடிப் பார்ப்பனர். இன்னும் நாம் தான் யாகத்தைத் தடுக்கிறோம். பழிக்கிறோம். ஜீவஹிம்சை கூடாது என்று கெஞ்சிக் கூத்தாடிச் சர்க்காருக்கு விண்ணப்பித்துக் கொண்டு யாகங்களின் மீது தடையுத்தரவு வாங்கி வருகிறோம்.

யாகம் என்றால் என்ன? என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். ஆடு, மாடு தின்ன ஆசைப்படும் சில பிராமணப் பைசாசங்கள் ஒன்றுகூடிக் கொண்டு, அவற்றின் இரத்தம் வெளிப்பட்டால் ருசி கெட்டுவிடும் என்பதற்காக, அவற்றை வெட்டிக்கறி செய்யாமல் அவைகளைக் கட்டிப் போட்டு, அவற்றின் விதைகளைக் கிடுக்கி கொண்டு கசக்கிக் கசக்கிச் சாக வைப்பார்கள். ஒரு ஆடோ, மாடோ இவ்விதம் சாகவைக்கப்பட பல மணி நேரங்கூட ஆகலாம். ஆனாலும் அகோர மாமிசபிண்டங்களான இந்த யாகப் பிசாசுகளுக்கு அதுபற்றிக் கவலையேது? இவ்வாறு உயிர்வதை செய்யப்பட்ட மிருகத்தை யாககுண்டத்திலிட்டு, அதில் நெய்யூற்றி வேக வைத்துத் தின்பதுதான் மனுதர்ம சாஸ்திரப்படி செய்யப்படும் யாகம். இப்படிப்பட்ட கோரவதை கூடாது என்று தடுத்தவர்கள்தான் ஆரியரால் அரக்கராக சித்திரிக்கப்பட்டனர்.

சூத்திரனுக்கு யாகம் செய்யும் உரிமை கிடையாது. யாகத்தை வெறுப்பவன் சூத்திரன். ஆகவே யாகத்தை வெறுக்கும் திராவிடராகிய நாம் ஆரியசாஸ்திரப்படிசூத்திரர்தான். ஆரியன் ஏது? சூத்திரன் ஏது? என்று நம்மைக் கேட்கிறார்கள் சில அப்பாவி மக்கள். சட்டம் கூறுமா சூத்திரன் இல்லையென்று? சூத்திரன், பிராமணன் இல்லையென்றால், கோயிலில் மணியடிக்கும் தொழில் ஒரே ஜாதிக்காரன் வசமே இருக்கக் காரணமென்ன? கோயில் அர்ச்சகர்கள் யார்? அவர்கள் ஏன் சமஸ்கிருதம் ஓதுகிறார்கள்? சமஸ்கிருதம்தான் தேவபாஷை, மற்றவை மிலேச்ச பாஷை, நீச்ச பாஷை என்று ஆரிய சாஸ்திரம் கூறியிருப்பதை நீ அறிவாயா? திடுதிடுவென்று நாலு ஜாதியாரும் கோயிலுக்குள் போவோம், சற்றிருங்கள் என்று கூறி பிராமணத் தோழன் உங்களைத் தாண்டிக் கொண்டு மூலஸ்தானத்திற்குள் போய்விடுகிறானா இல்லையா பாருங்களேன்? இதைப் பார்த்த பிறகும் எந்தத் தோழனாவது பிராமணன் சூத்திரன் இல்லை என்று கூறுவானாயின் அவன் அறிவு மலையேறி விட்டது என்றுதானே கூறவேண்டும். ஏன் இந்த உயர்வு தாழ்வுக் கொடுமையை இன்னும் மூடிவைக்கப் பார்க்கிறீர்கள்? உள்ளதை மூடிவைத்தால் அது புரை ஓட ஆரம்பித்துவிடும் என்பதை நீங்கள் அறியீரோ!

## வந்த சுதந்தரம் மனிதத்தன்மையைத் தந்ததா?

திராவிட மக்கள்தான் சூத்திரர்களாக இழிவுபடுத்தப்பட்டுள்ளனர். சுதந்தரம் வந்துவிட்டதென்று கூறி விட்டால் மட்டும் திருப்தி ஏற்பட்டு விடாது. இந்த உயர்வு தாழ்வு ஒரே மட்டமாக்கப்பட வேண்டும். பணம் பெற்றாலும் சூத்திரப் பட்டம் போகாது; பதவிபெற்றாலும் சூத்திரப் பட்டம் போகாது. பட்டங்கள் பலபெற்றாலும் இப்பட்டம் நீங்காது. பணம், பட்டம், பதவி இவற்றை என்று வேண்டுமானாலும் பெற்றுவிடலாம். ஆனால் இந்த இழிவு நீங்குவதும் மட்டும் அவ்வளவு சுலபமானதல்லவே. ஸர். ஏ. இராமசாமி முதலியார் பட்டம் பல பெற்றவர்தான். பணமும், செல்வாக்கும் உடையவர்தான். பெரிய பதவிகளெல்லாம் வகித்தவர்தான். வகித்தது மட்டுமல்ல, எல்லாவற்றையும் திறம்பட நடத்தி உலகத்தின் இரண்டாவது அறிவாளி என்று அமெரிக்க மக்களாலேயே புகழ்ந்து பேசப்பட்டவர்தான். இன்றும் திவான் பதவியில் இருந்து வருபவர்தான் என்றாலும் அவர் சூத்திரர்தானே, அவ்விழிவு அவரது பட்டத்திற்கோ, பணத்துக்கோ பதவிக்கோ பயந்து ஓடி விடக் காணோமே. ஆகவே இவ்விழிவு நீங்க வேண்டுமென்பதுதான் பட்டம், பணம், பதவி இவை பெறுதலைவிட மகா முக்கியமான காரியமாகும்.

இவ்விழிவு நீங்கினால் தம்பிழைப்புப் போய்விடுமே என்று அஞ்சுபவர்களுக்காகவோ, அல்லது அவர்களுக்காகப் பரிதாபப்படுபவர்களுக்காகவோ நாம் இவ்விழிவை மறந்துவிட முடியாது. இவ்விழிவை இதுவரை மறந்திருந்ததால்தான், ஒரு காலத்தில் உலகத்திற்கே நாகரீகம் கற்பித்துக் கொடுத்த நாம் இன்று ஆரியர்களால் சின்னப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

நாம் சுதந்தரம், சுயேச்சை பெற்றுவிட்டால் போதுமா? நாம் மனிதத்தன்மை பெறவேண்டாமா? ஒருவன் உயர்ஜாதி மற்றொருவன் இழிஜாதி என்ற பாகுபாடுஇருக்கும் வரையிலும், நாம் எப்படி மனிதர்களாகி விட்டோம் என்று கூறிக்கொள்ள முடியும்? இந்த நாட்டு மக்கள் மனிதத்தன்மை அடைவதற்காக நான் செய்துவரும் இவ்வேலையை யார் ஒப்புக்கொண்டாலும், நான் அவருக்குக் கையாளாயிருந்து பணியாற்றத் தயாராயிருக்கிறேனே! நான் வேண்டியது இழிவுநீக்க வேலையே ஒழிய தலைமைப்பதவி அல்லவே.

## யார் கவலைப் பட்டார்கள்?

இதுவரை இவ்விழிவு பற்றி யாராவது கவலை எடுத்துக் கொண்டதுண்டா? எத்தனையோ ரிஷிகள், எத்தனையோ நாயன்மார்கள், எத்தனையோ குருமூர்த்திகள், எத்தனையோ ஆச்சாரியர்கள் தோன்றிய நாடுதானே இது. இவர்களுள் எத்தனைபேர் இவ்விழிவு நீங்க என்ன முயற்சி எடுத்துக் கொண்டார்கள்? தெய்வீகப் பக்தியுள்ள சிலர் ஜாதிப்பிரிவினையை எதிர்த்தனர் என்றாலும் ஆரியம் அதற்கு அடிபணிய வில்லையே? மூடநம்பிக்கைகளை வெறுத்த சித்தர்களை நாஸ்தீகர் என்றுகூறி, மக்கள் அவர்களைப் பின்பற்றாமற்படி செய்து விட்டதே? ஜீவஹிம்சை கூடாது என்று கூறிய பௌத்தர்களையும், சமணர்களையும் கழுவிலேற்றி விட்டதே? வர்ணாஸ்ரமத்தைப் பாதுகாக்கத் தானே இவ்வளவும் செய்யப்பட்டது. அதுவும் அந்த வர்ணாஸ்ரமதர்மத்தில் ஆரியத்தின் பிழைப்புச் சிக்கிக்கொண்டதால் தானே அவ்வளவும் செய்யப்பட்டது.

## கீதையை எறிந்து கைகழுவி திருக்குறளைக் கையிலெடு!

பல்லாயிரக்கணக்கான பெண்களைக் கெடுத்த காமாந்தகாரனான கிருஷ்ணன் ஏன் கடவுளாக்கப்பட்டான்? அவனது உளறல் மொழிகள் அடங்கிய கீதை என்கித்திய பாராயணமாக்கப்பட்டு விட்டது? மகாஒழுக்கசீலரான திருவள்ளுவர் ஏன் கடவுளாக்கப் படவில்லை? அவரது பொய்யா மொழிகள் அடங்கிய குறள் ஏன் பாராயணமாக்கப்படவில்லை? இவற்றை நீ சிந்தித்துப் பார்த்ததுண்டா? கிருஷ்ணனும் கீதையும் வர்ணாஸ்ரம தர்மத்தை (ஜாதிப்பிரிவினையை) ஆதரிப்பதுதான், ஆரியத்தின் போற்றுதலுக்குக் காரணம் என்பதை நீ இன்றாயினும் உணருவாயா? உன் திருவள்ளுவரும் திருக்குறளும் ஆரியத்தால் போற்றப்படாமைக்குக் காரணம் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்ற கூற்றுத்தான் என்பதை உணர்வாயா? இன்றாயினும் உணர்வு பெற்று கிருஷ்ணனையும், கீதையையும் தூக்கி யெறிந்து விட்டு உண்மைத் திராவிடனான வள்

ளுவனையும், அவன் குறளையும் அத் திட்டத்தில் வைப்பாயா?

### ஏன் தம்பி இவ்வளவு வடநாட்டுப் பற்று?

ராம கிருஷ்ணரைப் போற்றும் அன்பனே! சிந்தித்துப்பார். உன் இராமலிங்கம் எந்த விதத்தில் அவரை விடத் தாழ்ந்தவர். அவரை எந்த வடநாட்டானாவது போற்றக்கண்டுள்ளாயா? உன்னுடைய ஒரு நாயன்மாரையாவது வடநாட்டானுக்குத் தெரியுமா? கபிலன் கூறியதென்னவென்று நீ அறிவாயா? ஏன் தம்பி உனக்கு இவ்வளவு வடநாட்டு ஆரியப்பற்று? இனியேனும் இன உணர்வு கொண்டெழு தம்பி! உன் இனத்தான் எந்த விதத்திலும் அறிவிலோ, ஆற்றலிலோ தாழ்ந்தவன் அல்ல என்பதை இன்றே உணர்வாய்!

### ஒரு குலத்துக்கொரு நீதியை ஒழித்திட வரிந்து கட்டு!

இதை எல்லாம் கூறினால் என்னை வகுப்புத்துவேஷி என்கிறாயே! பூசணிக்காய் அளவு எழுத்தில் "பிராமணாள் ஹோட்டல்" என்று போர்டு போட்டுக்கொள்கிறானே அதை ஏன் அநுமதிக்கிறாய்? ஜாதி பேதம் பாராட்டுவதில்லை யென்று பெருமையடித்துக்கொள்ளும் தேசியத் தோழனே! உன் சுதந்தர ராஜ்ஜியத்தில், நடைமுறையில் இருந்து வரும் ஹிந்து லாவில், ஜாதிக்கோர் நீதி ஏன் கூறப்பட்டிருக்கிறது? ஹிந்துலா சட்ட புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே போடப்பட்டிருக்கிறதே; 'இச்சட்டம் மனுதர்ம சாஸ்திரம் மற்றுமுள்ள ஹிந்துமத சாஸ்திரங்கள் இவற்றை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது; இச்சட்டத்தில் ஏதாவது சந்தேகம் வருமானால் நீதிபதிதானாக முடிவுகட்டக்கூடாது; இச்சாஸ்திரங்களில் வல்லவர்களான சாஸ்திரிகளைக் கொண்டுதான்முடிவு கட்ட வேண்டும், என்று எழுதியிருக்கிறதே." ஜாதி பேதம் பாராட்டாத சாஸ்திரிகளை எங்காவது நீங்கள் பார்த்ததுண்டா? அந்தச் சட்டத்தை இன்னும் புரட்டிப்பார்த்தால் ஒரு சூத்திரனுக்கு ஒரு பார்ப்பனத்தியிடம் பிள்ளை பிறக்குமானால், அப்பிள்ளைக்குச் சூத்திரனுடைய சொத்தில் பங்குரிமை இருக்குமென்றும், அதே போல் ஒரு பார்ப்பனனுக்கு ஒரு சூத்திரச்சியினிடம் ஒரு பிள்ளை பிறக்குமானால், அப்பிள்ளைக்கு பார்ப்பனன் சொத்தில் பங்குரிமை இருக்காதென்றும் கூறப்பட்டிருக்கிறதே. இது உன் கண்களுக்கு ஏன் படாமற்போகிறது? இந்த ஒரு குலத்துக்கொரு நீதியை அநுமதிக்கும் சட்டத்தை மாற்ற உனக்கு ஏன் கவலையில்லை?

### முதலில் இவைகளைச் செய்!

பாடுபடும் நான் ஏன் சூத்திரன்? பாடுபடாத சோம்பேறிப் பார்ப்பான் ஏன் பிராமணன்? என்றால் மட்டும் உனக்குப் பொத்துக்கொண்டு வர வேண்டுமோ கோபம்? சிந்திக்கும் அறிவு உனக்குச் சற்றேனும் இருக்குமானால், என்னை வகுப்புத் துவேஷி என்றுகூற உனக்கு நாக்கு நீளுமா? ஏன் இந்தப் பித்தலாட்டம்? நாலு ஜாதியென்று பிரித்துக்கூறும் சாஸ்திரங்களை ஏன் அநுமதிக்கிறாய்? ஜாதி பிரிவினை பற்றிக்கூறும் பகுதிகளைச் சாஸ்திரங்களிலிருந்து எடுத்து விட்டாயா? அல்லது அவற்றை எரித்து விட்டாயா? எங்களை வகுப்புத் துவேஷி என்று கூறுவதற்கு. ஹோட்டல் காரனை மனிதன் ஹோட்டல் என்று போட்டுக்கொள்ளும்படிசொல்! ஹிந்துலாவில் ஜாதிபற்றி யிருப்பன வற்றையெல்லாம் திருத்தியமை! சாஸ்திரங்களை யெல்லாம் கொளுத்திவிடு! ஜாதி பிரிவினை பற்றிக்கூறும் சகலத்தையும் அழி! கோயிலில் மணியடிக்கச் சகல ஜாதிக்கும் உரிமையுண்டு என்று சட்டம் செய்! பிறகு நான் வகுப்புப் பற்றிப் பேசினால் வாயேன் சண்டைக்கு? அதுவரை பொறுத்துக் கொண்டிரு தம்பி! இன்றேல் உன் வண்டவாளமெல்லாம் அம்பலமாகி விடப்போகிறது.

### சமபந்தியில் பார்ப்பானேன்றால் சந்தோஷப்படலாமா நீ?

பார்ப்பானெல்லாம் இப்போது சமபந்தி போஜனம்கூட செய்கிறார்களாம் ஜாதி பாராட்டாமல். எங்கள் வீட்டுச் சோறு ருசியாயிருந்தால் எந்தப் பார்ப்பானும் தான் சாப்பிடுவான். உண்மையில் எத்தனை பிராமணர்கள் தங்கள் வீட்டில் ஒரு பறையனையோ, செக்கிலியையோ தம்முடனிருந்து சாப்பிட அநுமதிப்பார்கள்? நீ சாப்பிடுவதைக் கூட நாங்கள் பார்க்கக்கூடாது என்கிறாயே! அதுதான் போகட்டும் என்றாலும், நான் வெட்டிய குளத்துத் தண்ணீரானாலும், அதையும் திரைபோட்டு மறைத்துக் கொண்டு தானே குடிக்கிறாய்!

### ஆலயப்பிரவேசம் உண்மையென்றால் அவனும் மணியை அடிக்கச்செய்!

பஞ்சமனைக் கோயிலில்கூட அநுமதித்து விட்டார்களாம்! அவனும் முடிச்சவிழ்க்க வேண்டுமென்று விட்டையா? அல்லது மோட்சத்திற்குப் போகட்டுமென்று விட்டையா? மோட்சத்திற்குப் போவதற்காகவே விட்டிருந்தால், இத்தனை நாள் அடித்து அநுபவித்த அந்தமணியைக் கொஞ்சம் அவனிடம் கொடேன்! அவனும் ஆசைதீர அடிக்கட்டுமே! செய்வையா! செய்தால் சாமி ஓடிப்போகுமே! அல்லது செத்துப்போகுமே! அப்புறம் உன்னை யார் காப்பாற்றுவார்கள்?

இந்த அக்கிரமமெல்லாம் செய்ய உனக்கு உரிமையுண்டு. நான் ஏன் சூத்திரன் என்றுகேட்பதற்குக்கூட எனக்கு உரிமையில்லையா? கேட்டால் கலகம் செய்கிறேன் என்பதா? உனக்குப் பழக்கமாகிவிட்டது, உன் புத்தி அடிமைத் தனத்தால் சின்னப் புத்தியாகி விட்டது. ஆகவே பொறுத்துக் கொண்டிருக்கிறோம். மானமுள்ள, அறிவுள்ள, வேறு எவன் இவ்விழிவைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? வேறு எந்த நாட்டிலாவது சூத்திரனும் பஞ்சமனும் உண்டா? இந்த உயர்வு தாழ்வு இருக்கும் வரைக்கும் இது ஒரு ஞான பூமியாகவும் ஆக முடியுமா?

(தொடரும்)

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கவேண்டியது, பண்டித மடையர்கள் பக்கமேளம் 'வாசிக்கவேண்டியது பாக்கி.

ஆல்பிரூனி என்கிற லோக சஞ்சார சாஸ்திரியும், பேபர் சக்கரவர்த்தியும் நமது சனசமூகங்களைப் பற்றிய அபிப்பிராயம் சொன்ன சமயம், சமஸ்கிருதக் கல்விக் களஞ்சியமும், அதற்குப் பக்கத்துணையாக இராமாயணம், பாரதம், பகவத்கீதை முதலியவைகளும் இருந்தன. லோக குருமார்கள், சமய ஆச்சாரிகள், சந்தானக் குரவர்கள், புரோகிதர்கள், சாஸ்திரிகள், பண்டிதர்கள், நாயன்மார்கள் இவர்களுக்காகக் கருடன் மேல் விஷ்ணுவும், ரிஷபத்தின்மேல் சிவனும் மேல் உலகத்திலும், கீழ் உலகத்திலும், ஆகாசத்திலும் வந்தும் போயும் காட்சி அளித்து வரப்பிரசாதம் கொடுத்துக் கொண்டிருந்த காலம். இத்தனையும் பல படை எடுப்பில் ஒரு தூசி போல பறந்தோடியதே யல்லாமல், ஒருதூசிப் பிரமாணங்கூட உதவவில்லை. இத்தனைக்கும் சுற்று மதில்போல அநுமார் வாலுமிருந்ததே? அதுதான் உபயோகப்பட்டதா? இல்லை? ஏன்? சனசமூகம் ஒன்று சேரும்படியான அனுபோக அறிவைக் கற்றுக்கொடுக்கவில்லை. சமயத்தின் பேராலும், தெய்வத்தின் பேராலும் புரோகிதக் கூட்டம் தங்கள் தங்கள் ஜீவனத்தையும் வயிற்றையும் காப்பாற்றிக் கொண்டவழியைக் கற்றுக் கொடுத்தார்கள். "அந்தணர்கள் குறை முடிப்பான்வைகுண்டத்திலிருந்து விரதம் பூண்டு ராமராக வந்தேன்" "ஆவுக்காயினும், அந்தணர்க்காயினும் துன்பம் செய்கிறவர்களை அழிப்பதற்கு வில்லோடு வந்திருக்கிறேன்" என்று இராமாயணத்தில் இராமர் சொல்லியிருக்கிறாரே யல்லாமல், படை எடுப்பின் துன்பத்தைத் தீர்ப்பதற்கு வைகுண்டத்திலிருந்து வந்தேன் என்று சொல்லவுமில்லை. பாஞ்சாலி சபதம் முடிக்கவும், திரௌபதை மானம் காக்கவும் வைகுண்டத்திலிருந்து கிருஷ்ணனாக பூலோகத்திற்கு வந்தேன் என்று தான் கிருஷ்ணனும் சொன்னாரே யல்லாமல், கொள்ளைக் காரர்களின் சந்தையில் இராமர் கிருஷ்ணர் இவர்களுடைய பக்த கோடிக

ளின் பெண்களை, ஒரு ஷிலிங் விலைக்குக் கொள்ளைக் கூட்டம் விற்றார்களே, அந்தப் பெண்களைக் காப்பாற்றக் கிருஷ்ணன் வந்ததாகவும் சொல்லவில்லை. அவர்கள் அந்த வேலைக்கு வரவில்லை, வந்த வேலையைத்தானே செய்வார்கள். அவர்கள் வந்த வேலை அந்தணர்களைக் காப்பாற்றும் வேலை. "பிராம்மணோமம தேவதா" பிராமணனே என்குல தெய்வம் என்று கிருஷ்ணன் கீதையில் கூறியபடி, இதை எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கும்படியான வேலை. அந்த வேலை விட்டுப் போகாமல் தொடர்ச்சியாக நீடித்து வருவதற்காகத்தான் இராமாயணம், பாரதம், பகவத்கீதை இவைகளைப் பள்ளியில் பாடமாக வைக்கச் சொல்லுகிறார் இராஜகோபாலாச்சாரியார். அதுதான் உண்மை.

நமது நாட்டைப் புண்ணிய பூமி என்று பார்ப்பார்கள் சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் பொதுவாய் விளங்கும் ஆதிமூலப் பொருளான கடவுள் எந்த ஊரிலாவது மனிதன், குரங்கு, பருந்து முதலியவைகளாக அவதாரம் அதாவது பிறந்திருக்கிறதா? இல்லை. நமது நாடு புண்ணிய பூமியாகவிருந்ததினால்தானே தெய்வங்கள் அவதாரம் பண்ணியிருக்கிறது. அதுவும் பார்ப்பார்களைக் காப்பாற்றுவதற்காக "நான் அந்தணர்தம் அடியாருக்கும் அடியேன்" என்றுசிவக் கடவுள் சொல்லுகிறது. பிராமணனே என்குல தெய்வம் என்று விஷ்ணுக் கடவுள் சொல்லுகிறது. இதைவிடப் பார்ப்பார்களுக்கு அந்தஸ்தும் பெருமையும் என்ன வேண்டும்? அவர்களுக்கு இது என் புண்ணிய பூமியாகாது? பார்ப்பார்களிடம் குற்றமென்னவிருக்கிறது? வஞ்சனையுடைய விஷ்ணு, சிவன் என்கிற கடவுளிடம் குற்றமிருக்கிறது. இந்தக் கடவுள்களை விட்டுவிட்டு எல்லோருக்கும் பொதுவில் நடனமிடும் உலகப் பொதுக் கடவுளை நம்புங்கள் என்றே சுயமரியாதைச் சங்கம் சொல்லுகிறது. அந்த உலகப் பொதுக் கடவுளுக்குப் பெண்ஜாதி, வய்ப்பாட்டி, பிள்ளை, குட்டி கிடையாது. அத்தனை பாரத்தையும் நாம் சுமந்து அவதிப்படவும் வேண்டியதில்லை. பார்ப்பாருக்குத் தரகு கொடுத்தால்தான் அந்தக் கடவுள் திருப்திப்பட்டு, பூலோக, சுகத்திலோ, மோட்சத்திலோ, நமக்கும் நம் பெண்ஜாதி பிள்ளைகளுக்கும் வயதை அதிகப்படுத்தியோ வேண்டியதையெல்லாம் கொடுத்தோ வய்ப்பார் என்கிற கவலையுமில்லை. மிச்ச மீதப் பணத்தைத் தெய்வத்தின் பேரால் பார்ப்பாருக்குக் கொடுத்துப் பாவங்கள் போய் விட்டனவென்று நினைத்துப் பக்கத்திலுள்ள ஏழைகளுக்குச் செய்யவேண்டிய உபகாரங்களையும், தருமங்களையும் செய்யாமலும், செய்ய முடியாமலும், நிறுத்தி விட்டுப் பாவத்தை ஏற்றுக் கொள்ளவும் வேண்டாம்.

இப்பொழுது மனுஷ்ய ஜாதி மொத்தத்திற்கே பெரிய திருவிழா நடக்கிறது. எல்லா நாட்டுக் கூட்டமும் ஊர்வலத்துடன் போகிறது. எல்லா விஷயங்களிலும் ஒரே மாதிரியாகப் போவதில்லை. இருந்தாலும் ஊர்வலம் முன்னே செல்லுகிறது. நமது போலித் தெய்வங்கள் வருஷத்திற்கு ஒரு தரம் கலியாணம் செய்துகொண்டு, பொங்கலும் புளியோதரையும் பார்ப்பாருக்குண்டுபண்ணும் ஊர்வலம்தான், நமது தெய்வங்களுக்குத் தெரியுமேயல்லாமல், உலகப் பொது விதியை அனுசரித்து, உலகப் பொதுக்கடவுள் நடத்தும் ஊர்வலத்தைப்பற்றி நம் தெய்வங்களுக்குத் தெரியாது, கவலையுமில்லை. அனுபோக அறிவுமில்லை. அந்தத் திருவிழாவில் பொதுத் தெய்வம் நம்மையும் கூப்பிடுகிறார். பூசாரி தடுக்க நாம் இடங் கொடுக்கலாமா? சிறிது பணக்காரன் வந்தால் பூசாரி பல்லைக்காட்டுவான். இடைவிடாமல் அவமானமும் கஷ்டமும் பட்டுத் தீண்டலாயிருக்கிறோம். அதைச் சுத்திபண்ணித் தீர்க்கவேண்டும். தானாக விரும்பி, தான் உழைத்தல் என்பதால் சுத்தி பண்ணவேண்டும். மனுஷ ஜாதியுடன் நாம் சமநடையாகச் செல்லவேண்டுமானால், ஒன்றாய்ச் சேரவேண்டும்; ஒற்றுமை வேண்டும்.

நமது நாட்டைப் புண்ணிய பூமி என்று பார்ப்பார்கள்சொல்லுகிறார்கள். அக்கிரமம் நிறைந்த பூமி என்று நான் சொல்லுகிறேன். நம் தெய்வங்கள், குரு பீடங்கள், ஆச்சாரிகள், சாஸ்திரங்கள், எல்லாம் கொடுமைகள் நிறைந்தவைகளென்று சொல்லுகிறேன். தத்துவார்த்தம், நிச்சயா அர்த்தம், தருக்கி அர்த்தமெல்லாம் சொல்லுவது தப்பித்துக் கொள்ளும் வழியே ஆகும். எப்படி எனில்? அறிவு எல்லோருக்கும் பொதுவென்று உலகமெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறது. அப்படியே நடக்கிறது. நம் நாட்டில் அதை ஒத்துக்கொள்வதில்லை. அது மறுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றே போதாதா? எல்லாத் தானத்தையும்விட கல்வித்தானமே பெரிதென்கிறார்கள். இதைத் தடுக்கும் தேசம் ஒரு தேசமா? எந்த மனித ஜந்துவும், கல்வியால் உண்டாகும் பெரும் மகிழ்ச்சி பெறாத வண்ணம், எந்தக் காரணம் பற்றியும் தடுத்தல் எவ்வளவு அஸம்பாவிதமென்பதைக் கவனித்துப் பாருங்கள். பார்ப்பார்கள் தங்களைத் தவிர மற்றவர்கள் வேதம் படிக்கக் கூடாதென்றார்கள். அவர்களைப் பார்த்துச் சைவஜாதிப் பிள்ளைகள் தவிர மற்ற பிள்ளைகளைத் தேவாரப் பள்ளியில் சேர்க்கமாட்டோம் என்கிறார்கள் சைவர்கள். தேவாரத்தைப் பண்டாரப்பாட்டென்றும், சூத்திரத் தாசி மக்கள் பாஷை என்றும் பார்ப்பார்கள் சொல்லுகிறார்கள். அதுவுமல்லாமல் சிவன்கோவில்களில் தேவாரம் பாராயணம் நடப்பதற்குமுன், பிரசாதம் வாங்கிப்போய் விடுகிறார்கள். பார்ப்பார்களால் இவ்வளவு அவமதிக்கப்படும் தேவாரத்தை, தன்னினமான பிள்ளைகள் படிக்கக் கூடாதென்று தடுக்கும் சைவப்பண்டிதர்களின் படிப்பிற்கு மரியாதை செய்தாலும், புத்தியை என்னவென்று சொல்லுவது? சைவசன்மார்க்க சமரசசங்கமென்பதற்கு வெட்கப்படுவதில்லையே.

மற்ற பிள்ளைகள் மாம்சம் தின்னுகிறார்கள், அவர்கள் மாம்சம் தின்னும் பரம்பரை என்று சொல்லுவதற்கும் நியாயமில்லை. பச்சைமாம்சம் தின்ற பரம்பரையிலிருந்துதான் எல்லாப்பரம்பரையும் வந்தது. வேத வேள்வியை ஆதரிப்பது தேவாரம். வேதவேள்விக்கு ஈனாத கிடாரியின் மாம்சம்தான் வெகு இஷ்டமென்று வேதஸ்மிருதிகள் சொல்லுகின்றன. இந்து தெய்வங்களில் மாம்சம் தின்னாத தெய்வமுண்டா? திரு ஒற்றியூர் சிவத்தின் பெண்சாதி எருமைக்கறி தின்பதற்காக ஒருவாரம் தனித்து வாழ்கிறதே? சுப்பிரமணியருக்கு சேவலும் மீனுமல்லவா முக்கியஆகாரம்? வள்ளியம்மன் சைவர்களின் பங்காளி பெண்ணா? இராமருக்கு மான்கறியும் கருவாடுந்தானே கைகண்ட ஆகாரம். தெண்டாயுதபாணியின் முதல்மாணாக்கருக்கு கஞ்சாவும் கறியும்தானே இன்றும் படைக்கிறார்கள். இப்படியே பல விருக்கின்றன.

தியாகராஜ பாகவதருக்கு மாங்கிலிய பிச்சை கொடுத்ததற்காக அம்மனுக்கு 1000 ரூபாய்க்குத் தாலிவாங்கிக் கட்டினார்களாம். அம்மனுக்கு ஆயிர ரூபாய் லஞ்சம். கேஸ்விடுதலையான உடன் பாரிஸ்டர் எத்திராஜு மாங்கிலியபிச்சை கொடுத்தார் என்று சொன்னார்கள். அதற்கு அவருக்குக் கூலியில்லை. பார்ப்பாரத் தெய்வங்கள் கூலியில்லாமல் வேலை செய்யாது. அம்மாள் அருளில்லாவிட்டால் எத்திராஜுதான் எப்படி ஜெயிப்பார்? எத்திராஜின் சட்டஞான மில்லாவிட்டால், அம்மனுக்குத் தாலி எப்படிக் கிடைக்கும்? பாடுபட்ட பாரிஸ்டருக்குக் கூலியில்லை. பாடுபடாத அம்மனுக்குக் கூலி, அது தாலி. பார்ப்பாருக்கு இந்தப் பூமி ஏன் புண்ணிய-பூமியாகாது?

புதிய வெளியீடு.

A. S. கோவிந்தராஜு M.A.B.L.
எழுதிய
பார்ப்பனர் கூடாது
என்ற புத்தகம். விலை காலணா.
கிடைக்குமிடம்:—
24, கவரைவீதி, செங்கற்பட்டு

# எமது தீர்ப்பு

## "மலரும் தமிழகம்"

கவிதைகள்.

இயற்றியவர்: சாமி. பழனியப்பன். வெளியீடு: செந்தமிழ்ப் பண்ணை, புதுப்பட்டி, பொன்னமராவதி, புதுக்கோட்டை. விலை ரூ. ஒன்று.

மலரும் தமிழகத்துக்கு இன்றியமையாத பல துறைகளிலும், காதல், இன்பம், இயற்கை வளம், சமூக ஊழல், அரசியல் பித்தலாட்டம், கலைச்சுவை ஆகியவைபற்றிச் சிறுசிறு கவிதை மலர்களை அளித்துள்ளார் இளங்கவிஞர் பழனியப்பன். இந்நூலைப்பற்றி விரிவான பல சொற்கள் கூறுவதை விடுத்துச் சுருங்கிய முறையில் இவ்வாறுதான் கூறமுடியும். ஆசிரியர் பெயரை மறைத்துவிட்டு யாரிடமாவது கொடுத்து இவைபாரதிதாசன் இயற்றியவை என்றால் அவர்நம்பித்தான் ஆகவேண்டும். தமிழ் நாட்டில் இன்று வளர்ந்துவரும் "பாரதிதாசன் பரம்பரை"யில் இவரே முதலிடம் பெறத் தக்கவர் என்று உறுதியாகக் கூறலாம். 28 கவிதைகள் அழகிய முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

## "தமிழுலகு"

ஆசிரியர்: எஸ். எம். மகாலிங்க முதலியார். வெளியீடு: தென்னவர் நிலையம், கோட்டார். விலை ரூ. 2—0—0

பெரியாரவர்களின் 69வது பிறந்த நாள் நினைவாக இந்நூலை வெளியிட்டுள்ளதாக ஆசிரியர் தம் முன்னுரையிற் கூறுகிறார். தமிழ் மொழியின் தொன்மை—பெருமை, தமிழர் தம் நாகரீகம் ஆகியவை பற்றி ஆசிரியர் இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். இம்முறையில் இது வரை பலநூல்கள் பலரால் எழுதப்பட்டுள்ளன. அங்ஙனமிருக்க சுமார் 50பக்கங்கள் கொண்டிருக்கும் இந்நூலின் விலை ரூ 2 என்றால் அதுமிகமிக அதிகமாகவே தெரிகிறது.

## கடவுள் முளைத்தார்.

ஆரிசியர் ரா. தணலன்

விலை அணா 14.

எரிமலைப் பதிப்பகம் துறையூர்.

திருச்சி ஜில்லா.

கடவுள் முளைத்தார். இதைக் கேட்டாலே எந்த மதவாதியும் கலங்கிக் கனல் கக்குவான். இருந்தும் சிந்தனையின் அஸ்திவாரத்திலே நின்று தோழர் தணலன் கடவுள் முளைத்தார் என்பதை விளக்குகிறார். எப்படிக் கடவுள் முளைத்தார்? மாட்டுக்குக் கொம்பு முளைத்தது போலவா, உலக மக்களுக்கு மட்டும் கடவுள் முளைத்தார்? என்று கேட்கத் தோன்றும். அல்ல கொம்பு முளைத்தது, ஆணுக்குப்பருவ காலத்தில் முகத்தில் மயிர் முளைப்பது போல உள்பொருள். கடவுள் முளைத்தது அப்படி அல்ல. பின் எப்படி? சுயநலமும், பேராசையும் என்ற பெற்றோர்கள் பெற்றெடுத்தது கடவுள். இதை நல்ல நடையில் அழகாக விளக்கிச் செல்கின்றார் ஆசிரியர். சிந்தனைக்கு விருந்தான இந்த நூலை அவசியம் ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும்.

## காந்தியடிகள் நினைவுக் கண்ணிகள்.

ஆசிரியர் எம். ஆர். மத்திரன்.

விலை அணா 1.

திண்டுக்கல்.

79 கண்ணிகளில் காந்தியார் அவர்களின் பரிதாப மறைவு, வாழ்க்கை வரலாறு, வரலாற்றில் நாம் கொள்ள வேண்டிய படிப்பினை ஆகிய எல்லாவற்றையும் எளிய நடையில் எல்லோருக்கும் விளங்கத் தக்க முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது.

## விபசாரி.

தீட்டியவர் செல்வி மணாளன்.

விலை அணா 3.

6. வெங்கய்யர் தெரு

தங்கசாலைத் தபால், சென்னை.

படித்த பெண், ஆங்கில நாகரீகத்தை மேற்கொண்டு, அதனால் எப்படி விபசாரியாகிவிட்டாள் என்று, பார்வதி என்ற பெண் விபசாரியான பெரும் பட்டியலை ஆசிரியர் இச் சிறு நூலில் தீட்டியிருக்கிறார்.

## "வழிகாட்டி"

மாத இதழ்

ஆசிரியர்:- க. அ. புன்னைமுத்து

கல்லூரணி

விலை அணா 4.

வழிகாட்டி ஆசிரியர் நீண்டநாள் தன்மானப்பாசறையில் தங்கியவர், அனுபவமிக்கவர், எனவே பல திறப்பட்ட அரசியல் கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. காங்கரஸ் சர்க்காரின் எதேச்சாதிகாரப்போக்கு நல்ல முறையில் விளக்கிக் கண்டிக்கப் படுகிறது. இந்தியைத்திணித்தல், கருஞ்சட்டைப் படைமீது தடைஆகிய செய்திகள் பற்றி ஆசிரியர் ஆணித்தரமாகக் கண்டித்திருக்கிறார்.

## "இனமணி"

வார இதழ்.

ஆசிரியர்:- த. வ. மு. மகாலிங்கம்.

த. பெ. 82, ஈப்போ.

விலை 10 காசு.

மலாயாவாழ் திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் திராவிட இனவுணர்ச்சியை ஊட்டவும், தாயகத்தில் நடைபெறும் போராட்டங்களைத் திரட்டித் தெரிவிக்கவும், சிறந்த முறையில் கொள்கைகளை வெளியிடவும் உதவும் முறையில் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. இதுபோன்ற பல பத்திரிகைகள் இருந்தால்தான், அயல் நாடுகளில் வாழ்வு நடத்தச் சென்றுழலும் தோழர்களுக்கு ஆர்வமும், இனவுணர்ச்சியும் உண்டாகும். இப்பத்திரிகையின் தொண்டு வாழ்க! புகழ் வளர்க!

## திரவிடர் கழகமென்றால் என்ன?

எழுதியவர் எல். வீரராசன்

பாண்டியன் பதிப்பகம், கல்வார்பட்டி'

காசியாளையம் அஞ்சல் திண்டுக்கல்வழி

விலை 2 அணா.

இச்சிறு நூலில் திராவிடக் கழக லட்சிய விளக்கமும், திராவிடத் தலைவர்களின் வரலாறும், ஆரியர்களின் அண்டி ஒண்ட வந்த வரலாறும், எழுச்சியான நடையில் இனிமையான முறையில் தரப்பட்டிருக்கிறது.

## விமானம்.

(வார வெளியீடு)

ஆசிரியர் ஜே. மருதீசன்.

தனிஇதழ் 1 அணா. ஆண்டுக்கு ரூ 3.

1/6, தட்டான்குளம் சந்து

சென்னை 21.

சிறுவர்களுக்கென்று வெளியிடப்படும் விமானத்தின் முதல் குண்டில், சிறுவர்கள் விரும்பும்பல அம்சங்களும் வெடித்திருக்கின்றன. விரும்பும் அம்சங்கள் குறைந்து, விரும்ப வேண்டிய பல அம்சங்கள் பெருகினால் பலனுண்டு என்பது நம் கருத்து.

# வரப்பெற்றோம்.

★

## உலகப் பெரியார் காந்தி.

எழுதியவர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.

விலை ரூ. 1.

திராவிடப் பண்ணை

தெப்பகுளம் திருச்சி.

## ரேடியோவில் அண்ணா

பேசியவர் சி, என். அண்ணாதுரை எம். ஏ.

திராவிடப் பண்ணை

தெப்பகுளம் திருச்சி.

## ஆட்சிச் சொல் அகரவரிசை.

விலை அணா 7.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

சென்னை.

★

## மங்கயர்க்கரசி.

29-4-48ம் நாள் ஈரோடு நகர திராவிடர் கழக அமைப்பாளர் தோழர் ஈ. க. கருப்பய்யா அவர்களின் சகோதரி தோழியர் முத்துவுக்குப் பெண் மகவு பிறக்க, அம்மகவுக்குத் தோழர் க. பிச்சைமுத்து அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் மங்கயர்க்கரசி என்னும் பெயர் இடப்பெற்றது.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE